சிலுவையில் சிந்திய சிகப்பு முத்துக்கள் 7

ஓர் புதிய திருமறை கண்ணோட்டம்

ஆசிரியர்:

உறையூர் வளவன்

M.A., M.A., DH, DBC, CJ & MC, PhD.,

Dr. ஆ.ஆல்பர்ட் ஸ்டீபன், M.A., M.A., DH, DBC, CJ & MC, PhD.,
(உறையூர் வளவன்)
108, ஆசனூர் சாலை, சந்தப்பேட்டை – 605 766
திருக்கோவிலூர் தாலுகா, விழுப்புரம் மாவட்டம்

உங்களோடு சில வரிகள்...

புதிய சிந்தனைகள், புதிய கண்டுபிடிப்புகள் இவற்றை எல்லாம் இதயம் முதலில் உடனே ஏற்க மறுப்பது காலம் காலமாக இருந்துவரும் ஒன்றே! ‘சிலுவையில் சிதறிய சிகப்பு முத்துக்கள் ஏழு!’ என்ற இந்த சிறிய புத்தகத்தில் நான் எழுதி இருப்பது புதிய சிந்தனையாகவோ, புதிய கண்டுபிடிப்பாகவோ நான் எண்ணவில்லை. இவைகள் எனது புதிய வெளிப்பாடு என்றே கருதுகிறேன். படித்துப் பாருங்கள்!

அன்று டெலிவிஷனை கண்டுபிடித்த ஜான் பேயர்ட் தனது கண்டுபிடிப்பை செய்தியாக வெளியிட 1925ஆம் ஆண்டு லண்டனில் உள்ள ‘டெய்லி எக்ஸ்பிரஸ்’ என்ற பிரபல நாளிதழ் ஆசிரியரை சந்திக்கச் சென்றார். இதனை அறிந்த அந்த நாளிதழ் ஆசிரியர், தன் நிருபரை அழைத்து ‘‘கீழே வரவேற்பு அறையில் உட்கார்ந்திருக்கும் ஆளை உடனே வெளியே அனுப்பி விடு. அவன் பைத்தியக்காரன் என்று எண்ணுகிறேன். கம்பி இல்லாமல் காட்சியைக் காணும் ஒரு இயந்திரத்தை அவன் தான் கண்டுபிடித்திருப்பதாகச் சொல்கிறான். அவன் பைத்தியக்காரனாகத்தான் இருக்க வேண்டும். அவனை வெளியே அனுப்பிவிடு. ஜாக்கிரதை அவன் கையில் கத்தி கூட வைத்திருப்பான்’’ என்று சொல்லி அனுப்பினார் என்று நான் படித்திருக்கிறேன். ஆனால் இன்று..?

திருமறை என்பது இருபுறமும் கருக்குள்ள பட்டயமாகும். அது புதைந்து கிடக்கும் பொக்கிஷம். தோண்டத் தோண்ட ஊறும் ஜீவ நீர் ஊற்று. ஜெபத்துடன் படியுங்கள். மெய்ப்பொருள் காண பரிசுத்த ஆவியானவர் உதவட்டும்.

கிறிஸ்துவின் பணியில்,
உறையூர் வளவன்

திருக்கோவிலூர்
28.3.2017

இதை வெளியிட உதவிய குடும்பத்தினருக்கு என் இதயம் கனிந்த நன்றி. தேவன் இவர்களை ஆசீர்வதிப்பாராக!

Dr. M. மோகன் சம்பத்குமார், MS., MNAMS, FRCS, PhD. (Neuro)
Dr. Mrs. பிரைடா அருள், B.A., MBBS, MD சென்னை.
Mr. A. ராஜேஷ் ஸ்டீபன், BLM, MLM, M.Phil. சென்னை.
Mr. A. மனோஜ் ஸ்டீபன், BHM, MBM சென்னை.

புத்தகம் கிடைக்கும் இடங்கள்:

1. டாக்டர் எஸ்.தாயப்பன்
   12, ஜி.டி. நாயுடு தெரு, பாலாஜி அவென்யூ–1
   சேலையூர் அஞ்சல், சென்னை – 73
   போன்: 044 – 22234526.

2. டாக்டர் A. ஆல்பர்ட் ஸ்டீபன், Ph.D.
   108, ஆதனூர் சாலை, சந்தப்பேட்டை – 605 766
   திருக்கோவிலூர் தாலுகா, விழுப்புரம் மாவட்டம்
   செல்: 9486789191

3. திரு. A. ராஜேஷ் ஸ்டீபன், MLM, M.Phil.
   66/7, ரங்கா நகர் 4வது தெரு,
   திருநீர்மலை ரோடு, குரோம்பேட்டை,
   சென்னை – 600 044.
   செல்: 9444612450

நூல் விற்பனையாளர்கள் 30% கழிவு போக மீதி பணத்தை செலுத்தி பெற்றுக் கொள்ளலாம்.

அருட்செய்தி வெளியீடு
108, ஆதனூர் சாலை, சந்தப்பேட்டை – 605 766
திருக்கோவிலூர் தாலுகா, விழுப்புரம் மாவட்டம்
செல்: 9486789191

மதிப்புரை

நான் கிறிஸ்துவுக்குள் வந்ததின் நிமித்தம் எனது கடந்த கால பல நண்பர்களை இழந்திருக்கிறேன். ஆனால் வந்த பிறகு ஊழியத்தின் பாதையில் எனக்காகவும், என் குடும்பம் மற்றும் ஊழியத்திற்காக தொடர்ந்து ஜெபிக்கும் அன்பான பல உடன் பிறவா சகோதர, சகோதரிகளையும், ஊழிய நண்பர்களையும், நான் பெரிதும் மதிக்கும் பல தேவ மனிதர்களின் நட்பையும், உறவையும் பெற்றிருக்கிறேன். அவர்களில் ஒருவர்தான் எனது நண்பர் உறையூர் வளவன் என்கிற ஆல்பர்ட் ஸ்டீபன். அவர் எழுதிய சில ஆராய்ச்சி நூல்களை படித்த பின்பு அவரின் பல புத்தகங்களை நானே பதிப்பாசிரியராக வெளியிட்டு இருக்கிறேன். அவர் எழுதிய பல புத்தகங்களை அப்படியே கட்டுக்கட்டாக, கத்தை கத்தையாக அவருடைய ‘மோசமான’ கையெழுத்தில் (இப்போது எனக்கு பழக்கப்பட்டு விட்டது) என்னிடம் கொண்டு வந்து கொட்டி விட்டார். அத்தனையும் படித்தேன். அசந்து விட்டேன். ஆடிப்போய் விட்டேன். எல்லாமே வித்தியாசமான, ஆழமான சிந்தனைகள்.

அப்படிப்பட்ட ஒரு வித்தியாசமான வெளிப்பாடுகளுடன் எழுதப்பட்டுள்ள ஒரு நூல்தான் இந்த ‘சிலுவையில் சிதறிய ஏழு சிகப்பு முத்துக்கள்’ என்கிற அருமையான நூல். நமது ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து சிலுவையில் தொங்கிய வண்ணம் பேசிய கடைசி ஏழு வார்த்தைகள் குறித்து பேசாத போதகர்கள், ஊழியக்காரர்களே இருக்க மாட்டார்கள். காலம் காலமாக அனைத்து திருச்சபைகளிலும் பேசப்பட்டு இருக்கிறது. பேசப்பட்டு வருகிறது. ஆனால் அந்த வார்த்தைகளுக்கு இதுவரை யாருமே கூறாத வகையில் மிகவும் மாறுபட்ட ஒரு கருத்தை மிகவும் தெளிவாக, ஆதாரங்களுடன், தேவனின் உள்ளக் கிடக்கையை, அவருடைய ஈடு இணையில்லாத தேவ அன்பை பிரதிபலிக்கும் வகையில் ஒரு வித்தியாசமான கோணத்தில் கண்டு, தேவ ஆவியின் வெளிப்பாட்டோடு எழுதியிருக்கிறார். எல்லாமே பைபிள் முத்துக்கள்! பட்டொளி வீசும் பட்டை தீட்டிய பல வண்ண வைரக் கற்கள்! மேற்கொண்டு உங்களை நான் காக்க வைக்க விரும்பவில்லை. அவைகளே நீங்களே அவருடைய வார்த்தைகளில் படித்து, ரசித்து, ருசித்து, தியானித்து பரலோக ரகசியத்தின் சுகந்த மணத்தை அனுபவியுங்கள். கர்த்தர் நண்பர் உறையூர் வளவனுக்கு தீர்க்காயுளையும், இன்னும் பல ஆவிக்குரிய புத்தகங்களையும் எழுத கிருபை பாராட்ட வேண்டுகிறேன்.

அன்புடன்

26.03.2017

கிறிஸ்துவின் பணியில்,

எஸ்.தாயப்பன்

சிலுவையில் சிந்திய சிகப்பு முத்துக்கள் ஏழு!

I. தேவனுடைய வார்த்தை

நமது திருமறையில் புதிய ஏற்பாட்டில் முதல் நான்கு புத்தகங்களும் சுவிசேஷம் என்று அழைக்கப்படுகிறது. கடைசி புத்தகம் மட்டுமே 'யோவானுக்கு வெளிப்படுத்தின விசேஷம்' என்று சொல்லப்பட்டிருக்கிறது. மற்ற புத்தகங்களுக்கு இல்லாத ஒரு விசேஷம், ஒரு சிறப்பு அதற்கு உண்டு என்று கருதப்படுகிறது. மற்ற நான்கு சுவிசேஷங்களிலும் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் வரலாறு எழுதப்பட்டுள்ளது. ஆனால் யோவான் எழுதிய வெளிப் படுத்தின விசேஷமாகிய வெளிப்படுத்தலில் கர்த்தராகிய இயேசு கிறிஸ்து இந்த உலக வாழ்க்கைக்கு இருக்கும் நிலையைப் பற்றி, எந்த மனிதனும் காண முடியாத அந்த நிலையை பரிசுத்த ஆவி யானவர் யோவானுக்கு தரிசனம் மூலம் காட்டப்பட்டதை யோவான் எழுதுகிறார். அதுவே அந்த புத்தகத்தின் தனிச் சிறப்பாக கருதலாம்.

''**இயேசுவைப் பற்றின சாட்சி தீர்க்க தரிசனத்தின் ஆவியா யிருக்கிறது**'' – வெளி 19:10. கிறிஸ்துவைப் பற்றின உண்மைகள் யாவும் தேவ ஆவியினால் அறியப்பட வேண்டும். ''**அவருடைய நாமம் தேவனுடைய வார்த்தை என்பதே**'' என்று வேதத்தில் வெளி 19:13 காண்கிறோம். 1யோவான் 5:7இல் ''**பரலோகத்தில் சாட்சியிடுகிறவர்கள் மூவர், பிதா, வார்த்தை, பரிசுத்த ஆவி என்பவர்களே, இம் மூன்றும் ஒன்றாய் இருக்கிறார்கள்**'' என்று காண்கிறோம். கர்த்தராகிய இயேசு தேவ வார்த்தையாய், சத்திய வார்த்தையாய் நம்மோடு இருக்கிறார். இந்த வார்த்தையே, சத்தியம். அதுவே இயேசு கிறிஸ்துமானவர், ஆமென், அல்லேலூயா!

''**ஆதியிலே வார்த்தை இருந்தது. அந்த வார்த்தை தேவனிடத்தி லிருந்தது. அந்த வார்த்தை தேவனாயிருந்தது**'' – யோவான் 1:1. ''**அந்த வார்த்தை மாம்சமாகி, கிருபையினாலும், சத்தியத்தினாலும்**

நிறைந்தவராய் நமக்குள்ளே வாசம் பண்ணினார். அவருடைய மகிமையைக் கண்டோம், அது பிதாவுக்கு ஒரே பேறாவனருடைய மகிமைக்கு ஏற்ற மகிமையாகவே இருந்தது'' – யோவான் 1:14 என்று யோவான் பரிசுத்த ஆவியினால் வெளிப்படுத்தப்பட்டு எழுதுகிறார்.

இந்த யோவான் நமக்கு ஒன்றை எழுதுகிறார். ''**வேத வாக்கியங் களை ஆராய்ந்து பாருங்கள். அவைகளால் உங்களுக்கு நித்திய ஜீவன் உண்டென்று எண்ணுகிறீர்களே. என்னைக் குறித்து சாட்சி கொடுக்கிறவைகளும் அவைகளே**'' என்று தேவன் சொன்னதையும் நமக்கு சொல்கிறார்.

இந்து மத வேதங்களை ஆராய்ந்து பார்த்தால் புராணங்கள், இதிகாசங்கள் யாவும் கட்டுக் கதைகளாகவே இருக்கும். அது எங்கும் வேதத்தை ஆராய்ந்து பார்க்கச் சொல்லவில்லை. இஸ்லாமியர்கள் குரானை ஆராய்ந்து பார்க்க முடியாது. அது மத குற்றமாகவே கருதப்படுகிறது. ஆனால் கிறிஸ்தவ திருமறை மட்டும் வேதத்தை ஆராய்ந்து பாருங்கள் என்கிறது. ஏனெனில் அவைகள் யாவும் சத்திய வசனமாக இருக்கிறது. ஆமென், அல்லேலுயா!

திருமறையைப் படிக்கும்போது எல்லா வார்த்தைகளும் அதன் பொருள் வெளிப்படையாக அறிய முடியாதவைகளாக இருக்கின்றன. பலமுறை நாம் வேதத்தைப் படிக்கும்போது, ஒவ்வொரு முறையும் புதிய பொருள்கள் நமக்கு ஆவியானவர் மூலம் புலப்படுகிறதைக் காண்கிறோம். தானியேல் தீர்க்கதிரிசியின் புத்தகத்தில் இப்படியாக எழுதப்பட்டிருக்கிறதைக் காண்கிறோம்.

''**தானியேலாகிய நீயோவென்றால், முடிவு கால மட்டுமே இந்த வார்த்தைகளைப் புனிதப் பொருளாக வைத்து, இந்த புத்தகத்தை முத்திரை போடு; அப்பொழுது அநேகர் இங்கும் அங்கும் ஓடி ஆராய்வார்கள். அறிவு பெருகிப்போம் என்றார்**'' – தானியேல் 12:4 மற்றும்,

''**நான் இதை கேட்டும், அதின் பொருளை அறியவில்லை. ஆகையால், என் ஆண்டவனே, இவைகளின் முடிவு என்னமாயிருக் கிறது என்று கேட்டேன்.**''

''**அதற்கு அவன், தானியேலே போகலாம், இந்த வார்த்தைகள் முடிவு கால மட்டும் புதை பொருளாக வைக்கப்பட்டும்**

முந்திரிக்கப்பட்டும் இருக்கும்'' – தானியேல் 12: 8,9 என்றும் தானியேலுக்கும் தேவதூதனுக்கும் இடையே நடந்த உரையாடலாக எழுதப்பட்டிருக்கிறது.

வேதத்தை ஆராய்ந்து பார்க்கிறவர்கள், அதை முழுமனதோடும் ஆத்துமாவோடும் படித்து தியானம் செய்யும் விசுவாசிகள் ''**வேதவசனங்கள் இருபுறமும் கருக்குள்ள பட்டயமாக**'' பொருள் தருவதை உணர முடியும். பலரும் பலவிதமாக பொருள் கண்டு நமக்கு போதித்தார்கள், போதித்து வருகிறார்கள். '**ஆவிக்குரியவன் நிதானித்து அறிகிறான்**' என்ற வேத வசனத்தின்படியே நாம் அதனை அறிய முற்படுவோம்.

II. கல்வாரி சிலுவையில் சிந்திய இரத்தம்

''**கபாஸ்தலம் என்று சொல்லப்பட்ட இடத்தில் அவர்கள் சேர்ந்த போது, அங்கே அவரை சிலுவையில் அறைந்தார்கள்**'' – லூக்கா 23:33.

கபாஸ்தலம் என்பது ஊருக்கு புறம்பே உள்ள ஒரு இடம். ஒருவேளை இந்த இடம் குற்றவாளிகளை சிலுவையில் அறைய பயன்படுத்தப்பட்ட இடமாக இருந்திருக்க வேண்டும். கபாஸ்தலம் என்ற இடத்திற்கு சேர்ந்தபோது, அவரையும் அவருடன் இரண்டு கள்ளர்களையும் சிலுவையில் அறைந்தார்கள் என்று லூக்கா 23:33–இல் காண்கிறோம்.

''**அந்தப்படியே, இயேசுவும் தம்முடைய சொந்த இரத்தத்தினாலே, அனைத்தையும் பரிசுத்தம் செய்யும்படியாக நகர வாசலுக்கு புறம்பே பாடுபட்டார்**'' – எபிரேயர் 13:12 என்று காண்கிறோம். கபாஸ்தலம் என்ற சொல் கிரேக்கச் சொல்லாகும். அது இலத்தின் மொழியில் 'கல்வாரியா' என்றும், ஆங்கிலத்தில் 'கேல்வரி' (CALVARY) என்றும் மொழியெயர்க்கப்பட்டிருக்கிறது. இதன் வழி கல்வாரி என்று தமிழில் எழுதப்பட்டுள்ளது.

இப்பொழுது சிலுவையைப் பற்றி சிறிது பார்ப்போம்.

குற்றவாளிகளுக்கு தண்டனை நிறைவேற்றப்படும் தூக்கு மரம் ஒரு கழுமரம் போன்று சாபத்தின் சின்னமாக யூத நாட்டில் கருதப்பட்டது. அந்தச் சிலுவை மரம், கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் சிலுவை மரணத்திற்குப் பின் புனித மரமாக, புனித சின்னமாக, கிறிஸ்தவ மார்க்கத்தின் சின்னமாக மாறியது. சிலுவை

என்ற சொல், தமிழ் சொல் அல்ல. சிலுவை சின்னம் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவுக்குப் பின், முதலாம் நூற்றாண்டில் இந்தியாவிற்கு வரும்போது அது புனித சின்னமாகக் கருதப்பட்டது. ஆங்கிலத்தில் இதுவே CROSS என்றும், அதுவே தமிழில் குருசு என்றும் மாறி வழங்கி வந்தது. தற்போது நாம் பயன்படுத்தும் சிலுவை என்ற சொல் முதலில் கேரளா நாட்டில் மலையாள மொழியில் சிரிய கிறிஸ்தவர்கள் தேவ சபையின் ஆராதனையில் சிலுவை என்ற சொல் பயன்படுத்தப்பட்டது.

கேரளாவில் சிரியன் கிஸ்தவர்கள் சிரிய மொழியில் ஆராதனை நடத்தும்போது, சிலுவை என்பது 'சிலிவோ' என்று பெயர் பெற்றது. பின்னர் அதுவே தமிழில் சிலுவையென்று வழக்கிற்கு வந்துள்ளது என்று திருமறை வரலாற்றில் காண்கிறோம்.

இந்த சிலுவையின் வரலாற்றை நாம் காண முற்பட்டால் அது முதன் முதலாக பொனீசியா நாட்டில் பயன்படுத்தப்பட்ட, குற்றவாளிகளுக்கு தண்டனை தர பயன்படுத்தப்பட்ட தூக்கு மரமாகும். பின்னர் அது எகிப்து, பாரசீகம், கிரேக்கு மற்றும் ரோம ராஜ்ஜியங்களில் பயன்படுத்தப்பட்டுள்ளது. ரோமர்கள் தங்கள் ஆளுகைக்கு உட்பட்ட ராஜ்ஜியங்களில் ரோமர்களுக்கு எதிராக செயல்பட்ட குற்றவாளிகளுக்கு, அடிமைகளுக்கு, அரசு தண்டனைக்குட்பட்டவர்களுக்கு, தண்டனை தர இது பயன்படுத்தப்பட்டது. சிலுவை மரம் என்பது இழிவான, சாப மரமாக கருதப்பட்ட ஒன்றாகும்.

கிறிஸ்துவுக்குப் பின் எழுதப்பட்ட வரலாற்றில், கிறிஸ்துவுக்காக பட்ட துன்பங்கள், பாடுகள், அவமானங்கள் இவற்றை உவமையாக சிலுவையை சுமப்பதாக எழுதப்பட்டது என்பதையும் காண்கிறோம். இயேசுவிற்காக படும் பாடுகள் 'சிலுவையை சுமத்தல்' என்று குறிக்கப்பட்டிருக்கிறது. ஆகையால் தான் சிலுவைபாடுகள் சிலுவையை சுமத்தல் என்றும் ஒருவன் கிறிஸ்துவை பின்பற்ற வேண்டுமானால் இந்த பாடுகளை சுமக்கத் தயாராக இருக்க வேண்டும் என்றும் நிபந்தனையாக கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவே சொன்னதாக காண்கிறோம். **'ஒருவன் என்னைப் பின்பற்ற விரும்பினால், அவன் தன்னைத்தான் வெறுத்து, தன் சிலுவையை எடுத்துக் கொண்டு என்னைப் பின்பற்றக் கடவன்'** என்று இயேசு கூறுகிறார். – (மாற் 8:34) (லூக்கா 9:23)

கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவுக்காக துன்பத்தை, அவமரியாதையை பொறுமையோடு சகித்துக் கொள்வதை, வெறுப்பற்று அதற்கு காரணமானவர்களுக்கும் அன்பு காட்டுவதாக சிலுவையை சுமத்தல் இருந்ததாகக் கருதப்பட்டதாக திருமறையில் காண முடிகிறது.

ஆதிகாலத்தில் சிலுவையை சுமத்தல் கிறிஸ்தவர்களுக்கு அடையாளமாக இருந்துள்ளது. ஸ்தேவான் காலம் முதல் கிறிஸ்துவுக்குப் பின்னும் கிறிஸ்துவை பின்பற்றிய காரணத்திற்காக, அவரை தேவகுமாரன் என்று விசுவாசித்து அறிக்கை இட்டதற்காக ஆதி கிறிஸ்தவர்கள் அடிக்கப்பட்டனர். சிறை வாசத்திற்கும் ஆளானார்கள். ஆனால் அத்தனை பாடுகளையும் கிறிஸ்துவுக்குள் சகித்து கொண்டு, பொறுமையோடு, அவர்களுக்காக ஜெபித்தார்கள். இந்த உன்னத அனுபவம் சிலுவையை சுமத்தலாக காணப்பட்டது. பவுல் கலாத்தியருக்கு எழுதிய நிரூபத்தில் ''**ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் சிலுவையைப் பற்றியே அல்லாமல் வேறொன்றையும் பற்றி ஒருக்காலும் பெருமை பாராட்டியதில்லை**'' என கலாத்தியர் 6:14–இல் என்கிறார்.

ஒருவன் கிறிஸ்துவுக்குள் வரும் போது புது மனிதனாக, புது சிருஷ்டியாக மாறுகிறான். மறு ரூபமாக்கப்படுகிறான். பழைய குணங்கள், கோபங்கள், முரட்டுத்தனம், பழிவாங்கும் குணம் இவைகள் எல்லாம் மாறி புது மனிதனாக மாற முடியும் என்பதே சிலுவையை சுமத்தல் அடையாளமாக இருந்தது... இருக்கிறது. வாழ்வில் தீமையை தீய குணத்தை, பொல்லாத நினைவுகளை கிறிஸ்து இயேசுவுக்குள் சிலுவையில் அறைந்து, புதுமனிதனாக உயிர்த்தெழுதல் சிலுவை மரணமாக நமக்கு இருக்கிறது என்று திருமறை வரலாற்றின் மூலம் அறிகிறோம். அப்படி வாழ்பவனே உண்மை கிறிஸ்தவன் என்று சொல்லப்பட்டிருக்கிறது.

''**கிறிஸ்துவோடு சிலுவையில் அறையப்பட்டேன்; இனி நானல்ல; கிறிஸ்துவே எனக்குள் வாழ்கிறார்**'' என்கிறார் பவுல் (கலாத்தியர் 2:19,20).

கிறிஸ்துவுக்குப் பின் சிலுவை சாப சின்னமல்ல. புனித, ஆசீர்வாதத்தின் சின்னமாக மாறியது. இயேசு கிறிஸ்துவின் வல்லமையின் பிரதிபலிப்பை, அதில் காண முடிகிறது. அசுத்த

ஆவிகள் கூட சிலுவையைக் கண்டு பயப்படுகிறதை நாம் நமது சுவிசேஷ பணியில் காண முடிகிறது. ஆமென்! அல்லேலூயா!

இரத்தம் சிந்துதலும் பாவமன்னிப்பும்

இரத்தம் சிந்துதலும், பாபமன்னிப்பும் கிறிஸ்துவுக்கு முன்னும் பின்னும் மாறுபடுகிறது. பழைய ஏற்பாடு காலத்தில் பலியின் மூலம் கிடைத்த பாவமன்னிப்பு கிறிஸ்துவுக்குப் பின் இயேசு கிறிஸ்துவின் இரத்தத்தால் நமக்கு கிடைத்துள்ளது.

இரத்தம் பற்றிய திருமறை போதனைகளும் கோட்பாடுகளும் கிறிஸ்துவுக்கு முன் முற்றிலும் மாறுபட்டதாக உள்ளது. பழைய ஏற்பாட்டு காலத்தில் 'இரத்தமே மாமிசத்திற்கும் உயிர்' என்று கருதப்பட்டது.

''சகல மாமிசத்திற்கும் இரத்தம் உயிராயிருக்கிறது. இரத்தம் ஜீவனுக்குச் சமானம்; ஆகையால் எந்த மாம்சத்தின் இரத்தத்தையும் புசிக்க வேண்டும்'' – லேவியாகமம் 17;14.

கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவே இராபோஜனம், புதிய உடன்படிக்கையின் நினைவு கூறுதலாக அப்பமும் திராட்சை ரசமும் அவரின் உடலும் இரத்தமுமாக இருக்கிறது என்கிறார்.

பழைய ஏற்பாடு காலத்தில் பாவ நிவர்த்திக்காக இரத்தம் சிந்தப்படுதல் அவசியம் என்ற கோட்பாடு வலு பெற்றிருந்ததையும் கிறிஸ்துவுக்குப் பின் இயேசு கிறிஸ்துவின் இரத்தத்தால் நாம் பாவமன்னிப்பு பெற்றோம் என்றும் காண்கிறோம்.

பழைய ஏற்பாடு காலத்தில் உயிர்பலி கொடுத்தால் பாவ மன்னிப்பு பெற்றதாக எழுதப்பட்டிருப்பதையும் புதிய ஏற்பாடு காலத்தில் இயேசு கிறிஸ்து தன்னையே ஜீவ பலியாய் கொடுத்து அந்த தேவ ஆட்டுக்குட்டியின் இரத்தத்தால் நாம் பாவத்திலிருந்து மீட்கப்பட்டதாகவும் காண்கிறோம்.

இரண்டாவது புதிய உடன்படிக்கையாக இயேசு கிறிஸ்துவின் இரத்தம் சிந்தப்பட்டதால் பழைய உடன்படிக்கை தேவையற்றதாக மாறியதையும் கவனிக்க வேண்டும்.

தேவ ஆட்டுக்குட்டியான இயேசு கிறிஸ்துவின் திரு இரத்தம் சகல பாவத்திற்கும் நமக்கு பரிகாரமாக இருக்கிறது.

''**அவர் ஒளியிலிருக்கிறதைப் போல நாமும் ஒளியிலே நடந்தால் ஒருவரோடொருவர் ஐக்கியப்பட்டிருப்போம்; அவருடைய குமாரனாகிய இயேசு கிறிஸ்துவின் இரத்தம் சகல பாவங்களையும் நீக்கி, நம்மை சுத்திகரிக்கும்**'' என்று 1 யோவான் 1:7–இல் யோவான் எழுதுகிறார்.

பவுல் ரோமருக்கு எழுதும் நிருபத்தில் ''**இப்படி நாம் அவருடைய இரத்தத்தினாலே நீதிமான்களாக்கப்பட்டிருக்க, கோபாக்கினைக்கு நீங்கலாக அவராலே நாம் இரட்சிக்கப்படுவது அதிக நிச்சயமாகும்**'' என ரோமர் 5:9–இல் எழுதுகிறார்.

திருமறையில் இரத்தமும் உயிரும் ஒரே பொருள்பட பல இடங்களில் வருவதைக் காண்கிறோம். மாசில்லாத தேவ ஆட்டுக்குட்டியாகிய இயேசு கிறிஸ்துவின் விலையேறப்பெற்ற இரத்தமும் தேவ ஆட்டுக்குட்டியான இயேசு கிறிஸ்துவின் ஜீவ பலியும் நம்மை சுத்திகரித்து, அப்பா பிதாவே என்று அழைக்கிற சுவீகாரப் புத்திர பாசத்தை நமக்குத் தந்து அவருடைய பரிசுத்தத்திலும், கிருபையிலும், வல்லமையிலும் அதிகாரத்திலும் பங்கு தந்து நம்மை எல்லா பாவங்களில் இருந்தும் விடுதலை தந்துள்ளது. அவருடைய சத்தியத்தினாலும் தேவ ஆட்டுக்குட்டியின் இரத்தத்தினாலும் நாம் விடுதலை பெற்றிருக்கிறோம்.

நமது பாவத்தின் விடுதலை கல்வாரியில் இயேசு கிறிஸ்துவால் சிந்தப்பட்ட இரத்தமாக இருக்க, அவர் நம்மை இரத்தம் சிந்தி மீட்டுக் கொள்ளும் முன் சொல்லிய ஏழு வார்த்தைகளைப் பற்றி நாம் இப்பொழுது தியானிக்கப் போகிறோம். ஒவ்வொரு நல்ல வெள்ளிக்கிழமை நாளிலும் நாம் எல்லா தேவாலயங்களிலும் அந்த ஏழு வார்த்தைகளைப் பற்றியும் பேச கேட்டுள்ளோம். நாம் சுமார் 40 ஆண்டுகளுக்கு முன் இந்த ஏழு வார்த்தைகளைப் பற்றி ஆராய முற்பட்டபோது, பரிசுத்த ஆவியானவர் வெளிப்படுத்திய சில காரியங்களைக் குறித்து ஆராய பலமுறை அந்தப் பகுதியைப் படித்தேன். ஆனால் அதில் நான் கண்ட பொருளுக்கும், பல பரிசுத்தவான் அதைப் பற்றி எழுதிய கருத்துக்கும் பல வேற்றுமைகள் காணப்பட்டாலும், நான் கண்ட சில பரிசுத்த ஆவியின் வெளிப்பாட்டை உங்களிடம் பகிர்ந்து கொள்ள விரும்புகிறேன்.

கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் 7 வார்த்தைகள்

கர்த்தராகிய இயேசு கிறிஸ்து தன் ஆவியை சிலுவையில் ஒப்பு கொடுக்கும்போது, சொன்ன ஏழு வார்த்தைகளையும் திருமறையை நமக்கு தந்த பரிசுத்தவான்கள் வரிசைப்படுத்தியுள்ளனர்.

நிறைவாழ்வு ஆய்வு வேதாகமத்தின்படி, கீழ்க்கண்டவாறு கொடுக்கப்பட்டுள்ளது.

இயேசு கிறிஸ்துவின் சிலுவைபாடு காலை 9 மணியிலிருந்து மதியம் வரை.

முதல் வார்த்தை மன்னிப்பின் வார்த்தை '**பிதாவே இவர்களை மன்னியும்**' – லூக்கா 23:34.

இரண்டாவது வார்த்தை இரட்சிப்பின் வார்த்தை. '**இன்றைக்கு நீ என்னுடனே கூடப் பரதீசியில் இருப்பாய்.** – லூக்கா 23:43.

மூன்றாவதாக அன்பின் வார்த்தை '**ஸ்திரியே இதோ உன் மகன்**', '**சீஷனே இதோ உன் தாய்**'. – யோவான் 19: 26, 27.

மூன்று மணி நேரம் அந்தகாரம் மதியம் முதல் பிற்பகல் 3 மணி வரை. இந்த இடைப்பட்ட காலத்தில் கர்த்தராகிய இயேசு கிறிஸ்து எந்த வார்த்தையையும் பேசவில்லை. இந்த முதல் மூன்று வார்த்தைகளும் பூலோகத்தில் அவர் முன்னிருந்தவர்களுக்காக சொல்லப்பட்ட வார்த்தைகள் என்பதைக் கண்டோம்.

அதற்குப் பின் சொல்லப்பட்ட நான்கு வார்த்தைகளும் கர்த்தராகிய இயேசு கிறிஸ்து பரலோக பிதாவோடு கொண்ட தொடர்பை பிரதிபலிக்கும் வார்த்தைகளாக இருக்கிறதை பார்க்கிறோம். பேசாது இருந்த இடைப்பட்ட சில மணி நேரங்கள் இயேசுவும் தேவனும் ஆவியில் உரையாடி இருக்கக் கூடும் என்று எண்ணத் தோன்றுகிறது. இவைகளில் ஒன்றை கவனிக்கத் தவறி விடக்கூடாது. முதலில் கிறிஸ்து சொன்ன வார்த்தைகள் அவராவே பேசியது. கடைசி நான்கு வார்த்தைகளும் தாவீதின் குமாரனாகிய இயேசு கிறிஸ்து தாவீதுக்கு தேவன் பரிசுத்த ஆவியால் வெளிப்படுத்திய வார்த்தைகளையே கிறிஸ்து சொல்லி இருக்கிறார். இதை நாம் ஆவிக்குரிய மக்களாக சற்று நிதானித்து அறிய முற்பட வேண்டும். கடைசி நான்கு வார்த்தைகளைப் பார்ப்போம். இந்த நான்கு வார்த்தைகளும் பிற்பகல் 3 மணியளவில்

சொல்லப்பட்டதாக வேத பண்டிதர்கள் எழுதுகிறார்கள். நிறைவாழ்வு ஆய்வு வேதாகமத்தின்படி நான்காவதாக ஆவிக்குரிய வேதனையின் குரல் **'என் தேவனே என் தேவனே ஏன் என்னைக் கைவிட்டீர்'** – மத் 15:34.

ஐந்தாவதாக சரீர வேதனைக் குரல். **'நான் தாகமாயிருக்கிறேன்'** – யோவான் 19:28.

ஆறாவதாக வெற்றியின் குரல். **'முடிகிறது'** யோவான் 19:30.

ஏழாவதாக ஒப்படைக்கும் குரல் **''பிதாவே உம்முடைய கைகளில் என் ஆவியை ஒப்படைக்கிறேன்''** – லூக்கா 23:34, 36.

நிறைவாழ்வு ஆய்வு வேதாகமத்தில் குறிப்பிடப்பட்டுள்ளதுபோல, நான்காவது வார்த்தை ஆவிக்குரிய வேதனையின் குரலாக, ஐந்தாவது வார்த்தை சரீர வேதனையின் குரலாக, ஆறாவது வார்த்தையை வெற்றியின் குரலாகவும், ஏழாவது வார்த்தையை ஒப்படைப்பின் குரலாகவும், பொருள் கண்டு பரிசுத்தவான்கள் பலரும் பேசியும், எழுதியும் வருகிறார்கள்.

இவர்கள் ஏனோ திருமறையில் கூறப்பட்ட ஒன்றை காண, சிந்திக்க, ஆவியை மறந்து விட்டனர் என்றே எண்ணத் தோன்றுகிறது.

''கர்த்தரின் செய்கைகள் பெரியவைகளாகவும் அவைகளில் பிரியப்படுகிற எல்லாராலும் ஆராயப்படுகிறவைகளுமாயிருக்கிறது'' என்று சங்கீதம் 11:2இல் காண்கிறோம். யோவான் சுவிசேஷத்தில் **''நான் சுயமாய்ப் பேசவில்லை. நான் பேச வேண்டியது இன்னதென்று, உபதேசிக்க வேண்டியது இன்னதென்று என்னை அனுப்பின பிதாவே எனக்கு கட்டளையிட்டார்''** யோவான் 12:49. மற்றும் யோவான் 12:50இல் **''அவருடைய கட்டளைகள் நித்திய ஜீவனாயிருக்கிறதென்று அறிவேன்; ஆகையால் நான் பேசுகிறவைகளை பிதா எனக்கு சொன்னபடியே பேசுகிறேன் என்றார்''** என்று இயேசு சொல்லியிருப்பதை காண்கிறோம்.

இந்த நேரத்தில் இயேசு கிறிஸ்து வாழ்க்கையில் நடந்த ஒரு நிகழ்ச்சியை நினைவுகூர வேண்டும். மாற்கு 8:33இல் கிறிஸ்து ஏன் மரணத்தை குறித்தும் தன் உயிர்த்தெழுதல் குறித்தும் பேசுவதை விரும்பாத அவர் மீது அன்பு கொண்ட பேதுரு உரிமையோடு கடிந்து கொள்கிறார். அப்பொழுது இயேசு,

''**அவர் திரும்பி தம்முடைய சீஷரைப் பார்த்து பேதுருவை நோக்கி, எனக்கு பின்னே போ சாத்தானே, நீ தேவனுக்கு ஏற்றவவைகளை சிந்திக்காமல் மனுஷருக்கு ஏற்றவைகளை சிந்திக்கிறாய் என்று சொல்லி, அவரை கடிந்து கொண்டார்**'' என்று எழுதப்பட்டிருப்பதை காண்கிறோம்.

இயேசு கிறிஸ்துவின் கல்வாரி சிலுவை மரணத்தை நாம் எப்படி பார்த்துக் கொண்டிருக்கிறோம். நாம் தேவனுக்குரியவையாக பார்க்கிறோமா அல்லது மனுஷருக்குரியதாக பார்க்கிறோமா? சற்று நாம் யோசித்துப் பார்ப்போம்.

இந்த நேரத்தில் பவுல் கொரிந்தியருக்கு எழுதின முதலாம் நிரூபம் 20ஆம் அதிகாரத்தில் கூறியுள்ளவற்றை படித்து நாம் அதன்படி ஆவிக்குரியவைகளை ஆவிக்குரிய வகையில், இந்த ஏழு வார்த்தைகளுக்கும் பொருள் காண முற்படுவோம். இதுபற்றி பரிசுத்த பவுல் என்ன எழுதுகிறார் என பாருங்கள். இதைப் படிக்கும் நீங்கள் இதற்கு பொருள் கண்ட பரிசுத்தாவன்களை குறை காண்பதாக எண்ணி விடாதீர்கள். தயவு செய்து இதை புதிய கோணத்தில் பார்ப்போம். சிந்திப்போம். இப்பொழுது திருமறை வசனத்தைப் பார்ப்போம்.

''**நமக்கோ தேவன் அவைகளைத் தமது ஆவியினாலே வெளிப் படுத்தினார். அந்த ஆவியானவர் எல்லாவற்றையும் தேவனுடைய ஆழங்களையும் ஆராய்ந்திருக்கிறார்.**

மனுஷனிலுள்ள ஆவியேயன்றி மனுஷரில் எவன் மனுஷனுக் குரியவைகளை அறிவான்? அப்படிப் போல, தேவனுடைய ஆவியே யன்றி, ஒருவனும் தேவனுக்குரியவைகளை அறிய மாட்டான்.

நாங்களோ உலகத்தின் ஆவியைப் பெறாமல், தேவனால் எங்களுக்கு அருளப்பட்டவைகளை அறியும்படிக்கு தேவனிடத்தி லிருந்து புறப்படகிற ஆவியையே பெற்றோம்.

அவைகளை நாங்கள் மனுஷ ஞானம் போதிக்கிற வார்த்தைகளாலே பேசாமல், பரிசுத்த ஆவி போதிக்கிற வார்த்தைகளாலே பேசி, ஆவிக்குரியவைகளை ஆவிக்குரியவைகளோடே சம்பந்தப்படுத்தி காண்பிக்கிறோம்.

ஜென்ம சுபாவமான மனுஷனோ தேவனுடைய ஆவிக்குரியவை களை ஏற்றுக் கொள்ளான். அவைகள் அவனுக்கு பைத்தியமாகத்

தோன்றும். அவைகள் ஆவிக்கேற்ற பிரகாரமாய் ஆராய்ந்து நிதானிக்கப்படுகிறவைகளானதால், அவைகளை அறிய மாட்டான்.

ஆவிக்குரியவன் எல்லாவற்றையும் ஆராய்ந்து நிதானிக்கிறான். ஆனாலும் அவன் மற்றொருவனாலும் ஆராய்ந்து நிதானிக்கப்படான்'' 1 கொரிந்தியர் 2:10–15.

மேலும் இதை நிருபத்தில் பவுல் எழுதிய பலவும் நம்மை சிந்திக்கச் செய்கிறது.

''**சிலுவையைப் பற்றிய உபதேசம் கெட்டுப் போகிறவர்களுக்குப் பைத்தியமாயிருக்கிறது. இரட்சிக்கப்படுகிற நமக்கோ அது தேவபெலனாக இருக்கிறது.**'' – 1 கொரி 1:18 என்று எழுதும் பவுல்,

''**ஞானிகளை வெட்கப்படுத்தும்படி தேவன் உலகத்தில் பைத்தியமானவைகளைத் தெரிந்து கொண்டார்; பலமுள்ளவைகளை வெட்கப்படுத்தும்படி தேவன் உலகத்தில் பலவீனமானவைகளைத் தெரிந்து கொண்டார்.**'' – 1. கொரிந்தியர் 1:27.

தலைமுறை தலைமுறையாக ஒவ்வொரு நல்ல வெள்ளிக் கிழமையில் நாடு முழுவதும் சிலுவை வார்த்தையினை, பரிசுத்த ஆவியானவர் துணையோடு சற்றே மாறுபட்ட கோணத்தில் பொருள் காண முற்படுவோம். வேதம் கூறுகிறது. வேத வசனத்தை நாம் ஆராய்ந்து பார்க்க வேண்டும் என்று. ஆகையால் புதிய கண்ணோட்டத்தில் இவைகளைப் பார்ப்பதில் தவறில்லை என்று எண்ணுகிறேன்.

1. பிதாவே இவர்களை மன்னியும்

''**அப்பொழுது இயேசு, பிதாவே இவர்களை மன்னியும். தாங்கள் செய்கிறது இன்னதென்று அறியாதிருக்கிறார்கள்**'' என்றார். – லூக்கா 23:34.

நம்மிடமுள்ள தமிழ் புதிய ஏற்பாடு கிரேக்க மொழியிலிருந்து நேரிடையாக மொழிபெயர்க்கப்பட்டதாகும். கிரேக்க மொழியில் அபியேமி (APHIEMI) என்ற சொல், தமிழிலே மொழிபெயர்ப்பில் மன்னிப்பு என்று மொழி பெயர்க்கப்பட்டுள்ளது. நாம் பயன்படுத்தும் மன்னிப்பு என்ற சொல்லுக்கு கிரேக்கர் பயன்படுத்திய அபியேமி என்ற சொல்லுக்கும் பல வேற்றுமைகள் உண்டு.

ஓர் நீர் நிலையிலிருந்து தண்ணீர் திறக்கப்படுவது அபியேமி என்று கிரேக்க மொழியில் பொருள்பட பயன்படுத்தப்படுகிறது. அது விடுவித்தல் என்ற பொருளிலும் பயன்படுத்தப்படுகிறது. வரி செலுத்துவதிலிருந்து மன்னர் கொடுத்த சலுகையும் கூட மன்னிப்பு என்ற சொல் பொருள்படுகிறது.

சிலுவையில் துன்பங்களுக்கு மத்தியிலும் கர்த்தராகிய இயேசு கிறிஸ்து தன் அன்பின் வெளிப்பாட்டை தனக்கு துரோகம் செய்த, விரோதிகளையும் பாவத்திலிருந்து விடுவிக்க பரலோகப்பிதாவிடம் இயேசு வேண்டியிருப்பதாக கருதலாம். பழைய ஏற்பாட்டில் மன்னிப்பு என்ற மொழிபெயர்ப்பு கிப்பர் (KIPPER) 'மூடுதல்' என்ற பொருளிலும், நாசா (NASA) 'எடுத்துப் போடுதல்' என்ற பொருளிலும் வருகிறதைப் பார்க்கிறோம். இவற்றின் அடிப்படையில், முதலாம் வார்த்தையில் வரும் மன்னிப்பு என்ற சொல் அறியாது செய்த இவர்களுடைய குற்றங்களை, பாவங்களை, துரோகங்களை தேவனே மறைத்து விடும் ஆண்டவரே... தூக்கிப் போட்டு விடும் ஆண்டவரே... இவர்களை இந்தக் குற்றத்திலிருந்து விடுவித்து விடும் ஆண்டவரே என்று அவருடைய உள்ளத்திலிருந்து எழும்பிய இரக்கம், அன்பு, இவற்றின் பிரதிபலிப்பாக இந்த வார்த்தை இருக்கிறது என்றால் மிகையல்ல.

இயேசு கிறிஸ்து சிலுவையில் சொல்லிய முதலாம் வார்த்தை ஒரு மனிதனாக சொல்லவில்லை. தேவகுமாரனாக தன்னை அனுப்பிய தேவனிடம் தனக்கு துரோகம் செய்து கொடுமைப்படுத்திய மனிதர்களின் பாவத்தை மறைத்துவிடும், தூக்கிப் போடும் என்று தன் பிதாவிடம் முறையிடுவதாக, தன் மனதில் மனித இனத்தின் மேல் அவர் கொண்டிருந்த அன்பின் வெளிப்பாடாக இது காணப்படுகிறது. தனக்கும் வானத்தையும் பூமியையும், படைத்த தேவாதி தேவனின் அப்பா, பிதாவே என்ற குமாரனுடைய உறவை இதில் வெளிப்படுத்துகிறார். சிலுவையில் அறைந்தவர்களும் அருகில் இருந்தவர்களும் இந்த உறவை உறுதி செய்யும் வகையில் பிதாவைக் கூப்பிட்டு சொல்வதைப் பார்க்கிறோம்.

''பிதாவே, நீர் எனக்குச் செவி கொடுத்தபடியினால் உம்மை ஸ்தோத்தரிக்கிறேன். நீர் எப்பொழுதும் எனக்கு செவி கொடுக்கிறீர் என்று நான் அறிந்திருக்கிறேன்'' – (யோவான் 11:41, 42) என்று இயேசு லாசருவை கல்லறையிலிருந்து எழுப்பியபோது

கூறியதை இங்கு நினைவு கூறலாம். பிதா, குமாரன் உறவை வெளிப்படுத்த வேண்டிய காலங்களில் மட்டுமே கிறிஸ்து இயேசு வெளிப்படுத்தியுள்ளார்.

நாம் எதைக் கேட்டாலும் தேவனிடமிருந்து இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் கேட்டால் மட்டுமே பெற முடியும் என்பதை வேதம் உறுதிபட சொல்லுகிறது. தேவகுமாரனாகிய இயேசு கிறிஸ்துவுக்கு இவர்கள் செய்த கொடுமையான பாவத்தை தேவன் மன்னிக்க வேண்டுமானால், அது இயேசு கிறிஸ்துவின் மூலம் கேட்கப்பட வேண்டும் என்பதை இதன் மூலம் அறியலாம்.

இயேசு கிறிஸ்து பிதாவிடம் இவர்களை மன்னியும் என்று கேட்டார். கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவுக்கு பூலோகத்து மனிதர்களின் பாவத்தை மன்னிக்கும் அதிகாரம் இவருக்கு உண்டே என்பதையும் நாம் எண்ணிப் பார்க்க வேண்டும். 'நான் உங்களை மன்னித்தேன்' என்று இயேசு கிறிஸ்து சொல்லி இருக்கலாம். ஏன் அவ்விதம் சொல்லவில்லை? மாற்கு 2:10இல் ''**பூமியிலே பாவங்களை மன்னிக்க மனுஷகுமாரனுக்கு அதிகாரம் உண்டென்பதை நீங்கள் அறிய வேண்டும்**'' என்று இயேசு சொன்னதைக் காண்கிறோம். மன்னிப்பு இயேசு கிறிஸ்துவின் மூலம் நமக்கு கிடைக்கிறது என்பதை திருமறையில் காண்கிறோம். பாவிகளை மன்னிக்க அதிகாரம் பெற்ற இயேசு கிறிஸ்து இவர்களை தான் மன்னித்ததாகச் சொல்லவில்லை. இவர்கள் பாவத்தை மூடிப் போடும் பிதாவே என்று தேவனிடம் கேட்கிறார்.

பூலோகத்தில் மனிதர்கள் செய்யும் பாவத்தை மன்னிக்க கிறிஸ்து அதிகாரம் பெற்றிருந்தார். ஆனால் இயேசு கிறிஸ்துவை, கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவை, தேவகுமாரனாகிய இயேசு கிறிஸ்துவை, சிலுவையில் அறையச் செய்தது ஒரு மனிதன். இது மனிதனுக்கு விரோதமாகச் செய்த குற்றமோ, பாவமோ அல்ல. தேவனுக்கு எதிராக செய்த பாவமாகும். ஆகையால் இயேசு தேவனிடம் விண்ணப்பிக்கிறார் என்று கருதக் கூடும்.

இந்த முதல் வார்த்தையில் கவனிக்க வேண்டிய இன்னொரு முக்கிய காரியம், பிதாவே இவர்களை மன்னிக்கவும் என்று மாத்திரம் அவர் சொல்லவில்லை. '**தாங்கள் செய்வது இன்னதென்று அறியாதிருக்கிறார்களே**' என்பதாகும். இயேசு கிறிஸ்துவை சிலுவையில் அறைந்தது ஒரு மனிதனுக்கு செய்த

துரோகமல்ல. தேவகுமாரனை, தேவனால் பூலோகத்திற்கு அனுப்பப்பட்ட அவருடைய குமாரனை அவர்கள் சிலுவையில் அறையச் செய்து... தேவனுக்கு விரோதமாக பாவம் செய்தார்கள். ஆனால் அது தேவனுக்கு விரோதமாக செய்யப்பட்ட பாவம் என்று அவர்கள் அறியாதிருந்தார்கள். இயேசு கிறிஸ்துவை தேவகுமாரன் என்று அவர்கள் அறியாதிருந்தார்கள். ஆகையால் இயேசு கிறிஸ்து இவர்களை மன்னியும் என்றார்.

இந்த வார்த்தை இயேசு கிறிஸ்துவின் அன்பின் வார்த்தை மட்டுமல்ல, மன்னிக்கும் வார்த்தை மட்டுமல்ல, அவருடைய இரக்கத்தைக் காட்டும் வார்த்தை மட்டுமல்ல... மனித குலத்திற்கு இயேசு கொடுத்த எச்சரிக்கை வார்த்தையும் கூட என்பதை கவனிக்க வேண்டும்.

பிதாவே இவர்களை மன்னியும். தாம் செய்வது இன்னதென்று அறியாதிருக்கிறார்களே என்று சொல்லும்போது... இயேசு கிறிஸ்துவுக்கு விரோதமாய் செய்யப்படும் பாவமானது தேவனுக்கு விரோதமாக செய்யப்படும் பாவம் என்பதை இவர்கள் அறியாததால் இவர்களை மன்னியும் என்று சொல்லும்போது, கர்த்தராகிய இயேசு கிறிஸ்து தேவ குமாரன் என்று அறிந்தும் அவருக்கு விரோதமாக செய்யப்படும் பாவங்கள், துரோகங்கள் தேவனால் மன்னிக்கப்படுமா? என்பது கேள்விக்குறியாக நம் முன் நிறுத்தப்பட்டுள்ளது.

தேவனிடம் நாம் பெற்ற நியாயப்பிரமாணம் சத்திய வசனம் எல்லாம் நாம் எப்படி கிறிஸ்துவுக்குள் வாழவேண்டும், இருக்க வேண்டும் என்பதை நமக்கு காட்டி இருக்க, ஒரு கிறிஸ்தவன், கிறிஸ்துவை தேவநேசன் என்று விசுவாசிக்கிற ஒரு மனிதன், ஒரு விசுவாசி, அவருடைய சத்திய வசனத்தின்படி நடக்காமல் வாழும்போது, அது தேவனுக்கு விரோதமாக செய்யப்படும் குற்றமாக, பாவமாக இருக்கிறது என்பதை மறுக்க முடியாது.

இயேசுவை அறியாத காலத்தில் செய்திட்ட பாவம் போல், வாழ்ந்திட்ட பாவ வாழ்க்கை போல், அவரை அறிந்த பின்பும் நாம் வாழ முற்பட்டால் அது மன்னிப்புக்கு உரியதல்ல என்பதை, இது நமக்கு எச்சரிக்கையாக காட்டுகிறது என்று சொல்லலாம்.

இயேசு கிறிஸ்து கபாலஸ்தலம் என்ற இடத்தில் இரண்டு கள்ளர்கள் மத்தியில் அக்கிரமக்காரர்களில் ஒருவராக, கருதப்பட்டு

சிலுவையில் அறையப்பட்டார். ஆனால் துயரத்தின் மத்தியில் அவர் எந்த நோக்கத்தோடு பூலோகத்திற்கு அனுப்பப்பட்டாரோ அந்த நோக்கம் நிறைவேறத்தக்க, தன்னை சிலுவையில் அறைந்த அக்கிரமக்காரர்களுக்காக.. அவர்கள் பாவத்திலிருந்து விடுபெற தன்னை அனுப்பிய பிதாவிடம் மன்றாடுகிறார். தன் ஜீவனை ஒப்புவிக்கும் கடைசி நேரத்தில் கூட பாவத்தை மன்னிக்க, பாவத்திலிருந்து மனிதனை மீட்க வந்த தேவ ஆட்டுக் குட்டியாக தனது தன் உயிரை ஜீவ பலியாய், ஜீவாதார பலியாய் ஒப்புக் கொடுத்து, தன் இரத்தத்தால் அவரை சிலுவையில் அறைந்தவர்களை பாவத்திலிருந்து மீட்டார். ஆமென்! அல்லேலூயா!

2. இன்று என்னுடனே கூடப் பரதீசியிலிருப்பாய்!

இரண்டாவது வார்த்தையாக இயேசு கிறிஸ்து, '**இன்று என்னுடனே கூட பரதீசியிலிருப்பாய்**' என்று தனக்கு வலது பக்கத்திலிருந்த கள்ளனைப் பார்த்து கூறுகிறார். இயேசு கிறிஸ்து சிலுவையில் அறையப்படும் போது கூட, நாட்டு மக்கள் அவரை தேவகுமாரன் என்றோ... புனிதர் என்றோ, நல்லவர் என்றோ எண்ணிவிடக் கூடாது என்று அவரை சிலுவையில் அறைய ஒப்புக் கொடுத்த ரோம அரசு... திருடர்களும், அக்கிரமக்காரர்களுக்கும் அரசை எதிர்க்கும் அடிமைகளுக்கும் தண்டனை தரப்படும் இடமான கபாலஸ்தலம் என்ற இடத்தில் அக்கிரமக்காரர்களில் ஒருவராக அவரும் கருதப்பட வேண்டும் என்று எண்ணி இரண்டு கள்ளர்கள் மத்தியில் கள்ளர்களில் ஒருவரைப் போல சிலுவையில் அறைந்தார்கள் என்று காண்கிறோம்.

ஆனால் தேவன் சுமார் 800 ஆண்டுகளுக்கு முன்பாகவே இவ்விதம் நடக்கும் என்பதை ஏசாயா தீர்க்கதரிசியின் மூலம் வெளிப்படுத்தி இருந்தார்.

''அவர் தம்முடைய ஆத்துமாவை மரணத்திலூற்றி, அக்கிரமக்காரரில் ஒருவராக எண்ணப்பட்டு, அநேகருடைய பாவத்தைத் தாமே சுமந்து, அக்கிரமக்காரர்களுக்காக வேண்டிக் கொண்டதனிமித்தம் அநேகரை அவருக்கு பங்காகக் கொடுப்பேன், பலவான்களை அவர் தமக்கு கொள்ளையாகப் பங்கிட்டு கொள்வார்'' ஏசாயா 53:12. இந்த தீர்க்கதரிசன வசனத்தின் அடிப்படையில் நாம் ஆராய முற்படும்போது, கர்த்தராகிய இயேசு கிறிஸ்து பிதாவிடம் வேண்டிக் கொண்டதால் அவரை சிலுவையில்

அறைந்தவர்கள் பாவம் மன்னிக்கப்பட்டு இயேசுகிறிஸ்துவின் பரிசாக கொடுக்கப்பட்டார்கள் என்றும் அவர் தன் பாவத்தை அறிக்கையிட்டு, இயேசு தேவகுமாரன் என்று ஏற்றுக் கொண்ட கள்ளனும் அவர் பரிசாக மாற்றப்பட்டான். அதுமட்டுமல்ல, இயேசு கிறிஸ்து தன் ஆவியை ஒப்புக் கொடுத்தபோது தேவாலயத்தின் திரைச் சீலை மேல் தொடங்கி கீழ்வரை கிழிந்தது – (மத். 27:51) கல்லறைகள் திறந்தன. நித்திரையடைந்த அநேக பரிசுத்தவான்கள் உயிர்த்தெழுந்தார்கள் (மத் 27:52) இதனைக் கண்ட ‘‘**நூற்றுக்கு அதிபதியும், உன்னோடே கூட இயேசுவை காவல் காத்திருந் தவர்களும், பூமி அதிர்ச்சியையும், சம்பவித்த காரியங்களையும் கண்டு மிகவும் பயந்து, மெய்யாகவே இவர் தேவனுடைய குமாரன் என்றார்கள்.**’’ – மத்தே. 27:54.

இந்த வசனங்கள் மூலம் ஏசாயா தீர்க்கதரிசி கூறியது போல் இவர்களும் இயேசு கிறிஸ்துவை தேவகுமாரன் என்று விசுவாசித்து இயேசு கிறிஸ்துவின் பங்காக மாறினார்கள் என்று அறிகிறோம்.

‘‘**அநேகருடைய பாவத்தைத் தாமே சுமந்து, அக்கிரமக்காரருக்காக வேண்டிக் கொண்டதினிமித்தம் அநேகரை அவருக்கு பங்காகக் கொடுப்பேன்**’’ என்று ஏசாயா 53:12–இல் தேவன் சொன்ன வார்த்தைகள் இயேசு கிறிஸ்துவின் சிலுவை மரணத்தின் மூலம் நிறைவேறியது என்று காண்கிறோம்.

கர்த்தராகிய இயேசு கிறிஸ்து இரண்டு கள்ளர்கள் மத்தியில் சிலுவையில் அறையப்படுகிறார். அவர் சிலுவையின் மேலே ‘**இவன் யூதருடைய ராஜா**’ என்று கிரேக்க, லத்தீன், எபிரேய எழுத்துக்களில் எழுதி வைக்கப்பட்டிருந்தது. இவன் யூதரின் ராஜாவாம். இவன் தன்னை இரட்சித்துக் கொள்ளட்டும் என்று பரிகாசம் பண்ணுகிறார்கள். அவர் அருகே சிலுவையில் அறையப்பட்ட கள்ளர் ஒருவன் கேலியாக இயேசுவிடம் ‘**நீ கிறிஸ்துவானால் உன்னையும் எங்களையும் இரட்சித்துக் கொள்**’ என்று இகழ்கிறான் – (லூக்கா 23:39). மற்றவன் அவனை நோக்கி ‘‘**நீ இதை ஆக்கினைக்குட்பட்டவனாயிருந்து தேவனுக்குப் பயப்படுகிறதில்லையா? நாமோ நியாயப்படி தண்டிக்கப்பட்டிருக்கிறோம். நாம் நடப்பித்தவைகளுக்குத் தக்க பலனை அடைகிறோம். இவரோ தகாத ஒன்றையும் நடப்பிக்க வில்லையே என்று அவனைக் கடிந்து கொண்டு இயேசுவை**

நோக்கி ஆண்டவரே, நீர் உம்முடைய ராஜ்ஜியத்தில் வரும்போது அடியேனை நினைத்தருளும்'' என்றான்.

இயேசு அவனை நோக்கி, '**இன்றைக்கு நீ என்னுடனே கூடப் பரிதீசிலித்திருப்பாய் என்று மெய்யாகவே உனக்கு சொல்லுகிறேன் என்றார்**' – லூக்கா 23:43. இது இயேசு கிறிஸ்து சிலுவையில் சொல்லிய இரண்டாம் வார்த்தையாக இடம் பெறுகிறது.

இதில் காணப்படும் பரதீசு என்ற இடம் பரலோகத்தையே குறிக்கிறது என்று கருத முடிகிறது. 11கொரிந்தியர் 12:3ல் ''**அந்த மனிதன் பரதீசுக்குள் எடுக்கப்பட்டு மனுஷர் பேசப்படாததுமாகிய வார்த்தைகளைக் கேட்டானென்று அறிந்திருந்தேன்**'' என்று பவுல் எழுதுகிறார்.

இந்த வசனத்தின்படி பொருள் கொண்டால் பரதீசு என்பது பரலோகத்தையே குறிக்கிறது எனலாம். ஆங்கிலமொழி பெயர்ப்பில் சொர்க்கம் (PARADISE) என்று காணப்படுகிறது. நியாயப்பிரம்மான ஆதிகாலத்தில் பரலோகம் செல்ல விருத்தசேதனம் கட்டாயம் என்றும், கிறிஸ்துவுக்குப் பின் ஞானஸ்நானம் கட்டாயம் என்றும் கருதப்படுகிறது. ஆனால் இவைகள் என்ன என்றுகூட தெரியாத ஒரு கள்ளன் பரலோகத்திற்கு அழைக்கப்படுகிறான். எப்படி? தேவன் நம்மிடம் எந்த தகுதியை பரலோக வாழ்விற்கு இலக்கணமாக கருதுகிறார் என்று எண்ணத் தோன்றுகிறது.

கிறிஸ்துவோடு சிலுவையில் அறையப்பட்ட இரண்டு கள்ளர்களில் ஒருவன் தன் தவற்றை உணரவில்லை. அதை எண்ணி வருந்தவில்லை. தன் ஜீவனுக்குப் பின் உள்ள பரலோக வாழ்வைப் பற்றியெல்லாம் கவலைப்படாதவனாக இயேசுவை கேலி செய்கிறான். ஆனால் மற்ற கள்ளனோ தன் தவற்றை உணர்ந்து தன் தண்டனை நியாயமானது என்று அறிக்கையிடுகிறான். ஆயக்காரனைப் போல் தான் பாவி என்பதை ஏற்றுக் கொள்வதோடு மனுஷ குமாரனால் வந்த கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவை ஆண்டவர் என்று ஏற்றுக் கொள்வதோடு நியாய தீர்ப்பின் போது தன்னை நினைவு கூறும் என்று வேண்டிக் கொள்கிறான். இயேசு அவனைப் பார்த்து இன்று என்னுடனே கூட பரதீசிலிருப்பாய் என்று உறுதியாக கூறுகிறார்.

''**இயேசு அவனை நோக்கி இன்றைக்கே நீ என்னுடனே கூடப் பரிதீசிலிருப்பாய் என்று மெய்யாகவே உனக்கு சொல்லுகிறேன்**'' என லூக்கா 23:43–இல் கூறுகிறார்.

அதில் 'இன்றைக்கே' என்று குறிப்பிடுவதைப் பாருங்கள். நீ போய் ஞானஸ்நானம் எடு. ஆசாரியனிடம் காட்டு, காணிக்கை செலுத்து என்றெல்லாம் பரலோக வாழ்விற்கு நிபந்தனை சொல்லப்படவில்லை. அந்த நிலையிலும் இவரும் இல்லை. பாவ அறிக்கை, ஒப்புரவாகுதல், விசுவாசித்தல் இவைகள் முதலிடம் பெற்றன. பரலோக வாழ்விற்கு காலதாமதம் இல்லை. இன்றைக்கே என்பதோடு தான் உயிர்த்தெழவும், பரலோகம் செல்வேன் என்பதையும் காட்டும் வகையில் '**நீ என்னுடனே கூட**' என்கிறார் என்பதையும் கவனிக்க வேண்டும்.

அந்த கள்ளன் இயேசுவை அறியாதபோது குற்றவாளியாக இருந்தான். தான் மரிக்கும் தறுவாயில் இயேசுவை இன்னாரென்று அறிந்து கொண்டான். தன் குற்றத்தை மறைக்க வில்லை. ஆதாமைப் போல் நீர் கொடுத்த ஸ்திரியானவள் கொடுத்தாள், சாப்பிட்டேன் என்று தன் தவறுக்கு தப்பிக்க காரணம் காட்டவில்லை. தன் குற்றத்தை உணர்ந்தான். அறிக்கையிட்டாள். பாவமன்னிப்பும் தேவனுடைய தயவும் பெற்றான். தேவனோடு பரலோகத்தில் இடமும் பெற்றான்.

தான் இறக்கும்போது அவன் தன் மரணத்தைப் பற்றிய பயத்தை பெரிதாக கருதவில்லை. அது உடலோடு நின்று விடுகிறது. அவன் மரணத்திற்குப் பின் தன் ஆத்துமா என்னவாகும் என்று எண்ணியவனாக இயேசுவிடம் ஆண்டவரே என்று விண்ணப்பிக்கிறான், தேவ கிருபை பெற்றான்.

''**என்னிடத்தில் வருகிறவனை நான் புறம்பே தள்ளுவதில்லை**'' – யோவான் 6:37 என்றும், ''**என்னை அனுப்பினவரை விசுவாசிக் கிறவனுக்கு நித்திய ஜீவன் உண்டு; அவன் ஆக்கினைத் தீர்ப்புக்குட் படாமல், மரணத்தை விட்டு நீங்கி, ஜீவனுக்குட்பட்டிருக்கிறான் என்று மெய்யாகவே உங்களுக்கு சொல்லுகிறேன் என்றார்**'' என்று யோவான் 5:24–இல் காண்கிறோம்.

''**நான் உலகத்துக்காக வேண்டிக் கொள்ளாமல், நீர் எனக்குத் தந்தவர்களுக்காக, வேண்டிக் கொள்கிறேன். அவர்கள் உம்முடையவர்களாக இருக்கிறார்கள்**'' – யோவான் 17:9 என்று இயேசு சொல்கிறார்.

கர்த்தராகிய இயேசு தான் சொல்லியபடியே நிறைவேற்றினார். கள்ளனாய் வாழ்ந்து மரிக்கும் நேரத்தில் புனிதனாய் மாறி

இயேசுவோடு பரலோகம் செல்லும் பாக்கியத்தை சில மணி நேரத்தில் அவன் பெற்றான்.

இயேசுவோடு பல வருடங்கள் உடன் இருந்தவர்கள், அவரால் சுகம் பெற்றவர்கள், அவருக்கு பணிபுரிந்தவர்கள், அவரால் உயிர்த்தெழுந்தவர்கள் என்ற பலவகை மக்கள் இருக்கிறார்கள். ஆனால் பரலோக வாழ்வின் நிச்சயத்தை தேவன் தெரிவிக்கவில்லை. அவர்களும் அறியவில்லை. சமாரியப் பெண், பாவியாக இருந்தாலும் இயேசுவை மேசியா என்று தெரிந்து இரட்சிக்கப்பட்டாள். இவர்கள் விசுவாசத்தின் மூலம் நீதிமான்களாக்கப்பட்டார்கள். என்னிடம் வருகிறவனை புறம்பே தள்ளுவதில்லை என்ற இயேசு, கள்ளனைத் தெரிந்துகொண்டார். நமது நிலை என்ன? பரலோக வாழ்வின் நிச்சயம் நமக்கு உண்டா? இல்லையேல் அதற்குரிய தகுதியுடைய பாத்திரமாக மாறுவோம்.

3. அதோ உன் மகன்

கர்த்தராகிய இயேசு கிறிஸ்து சிலுவையில் சொல்லிய மூன்றாவது வார்த்தையாக இது வரிசைப்படுத்தப்பட்டுள்ளது.

''அப்பொழுது இயேசு தம்முடைய தாயையையும் அருகே நின்ற தனக்கு அன்பாயிருந்த சீஷனையும் கண்டு, தம்முடைய தாயை நோக்கி, ஸ்திரியே அதோ உன் மகன் என்றார்.

பின்பு அந்த சீஷனை நோக்கி, அதோ உன் தாய் என்றார். அந்நேர முதல் அந்த சீஷன் அவளைத் தன்னிடமாய் ஏற்றுக் கொண்டான்.'' – யோவான் 19:26, 27.

இந்த ஏழு வார்த்தைகளில் நான் அதிகமாக தியானித்தது இந்த மூன்றாம் வார்த்தை என்றால் மிகையல்ல. இன்று சிலுவை வார்த்தைகளாகிய இந்த ஏழு வார்த்தைகளைப் பற்றி என்னை எழுதத் தூண்டியது இந்த மூன்றாம் வார்த்தையே. சுமார் 40 ஆண்டுகளுக்கு முன் இந்த ஏழு வார்த்தைகள் பற்றிய புத்தகங்களை வாங்கி படித்தபோது இதோ உன் தாய் என்று யோவானிடம் இயேசு கூறியதாக எல்லாரும் எழுதி இருக்கின்றனர். ஏனோ என் மனம் இதை ஏற்றுக் கொள்ளவில்லை. பலமுறை இந்தப் பகுதியை திருமறையில் படித்தேன். இதுபற்றி எழுதிய எல்லா பரிசுத்தவான்களும், நல்ல வெள்ளிக்கிழமையன்று செய்திதரும் சுவிசேஷர்களும் யோவானிடம் இது சொல்லப்பட்டதாகவே எழுதியும் சொல்லியும் வந்தனர். அதற்கு

காரணமாக அவர்கள் எடுத்துக்காட்டுவது அன்பாயிருந்த சீஷன் யோவான் என்று திருமறையில் சொல்லப்பட்டிருப்பதை மட்டுமே காரணம் காட்டுவதை அறிந்தேன். அதுபற்றி பின்னர் பார்ப்போம்.

பலவித கஷ்டங்கள், அவமானங்கள், கேலி பேச்சுக்கள், நிந்தனைகள் இவைகள் மத்தியில் உடலில் ஏற்பட்ட வலியும் வேதனையும் ஒருபுறமிருக்க, இயேசு தான் தன் ஜீவனை ஒப்புவிக்கும் முன்பாக, இயேசு தன் தாய் மீது கொண்டிருந்த அன்பு, கடமை உணர்வு இவைகள் இந்த வார்த்தை மூலம் வெளிப்பட்டது என்று காண முடிகிறது. இயேசு தான் இந்த உலகத்தில் வாழ்ந்த நாட்களில் தன் அன்பை தன் தாயாரிடம் காட்டவில்லை. அதை தன் உள்ளத்தில் மறைத்து வைத்திருந்தார் என்றே சொல்ல வேண்டும்.

இயேசு விரைவில் இந்த உலக உறவை விட்டு விண்ணுலகத்திற்கு எடுத்துக் கொள்ளப் போவதை அறிந்திருந்தார். அந்தப் பிரிவால் தன் தாய் படப் போகும் துன்பத்தையும் அவர் அறிவார். ஆகையால் உலக வாழ்க்கையில் பட்டும் படாமல் தன் குடும்ப உறவை வைத்திருந்தார் என்றே கருத முடிகிறது.

இயேசுவிடம் உம் தாயும் சகோதரரும் உம்மைக் காண வந்திருக்கிறார்கள் என்று சொன்னபோது, நீங்களே என் தாயும் சகோதரருமாயிருக்கிறீர்கள் என்றார். தன் தாயிடம் ஏன் என்னைத் தேடுகிறீர்கள். நான் விண்ணில் பிதாவோடு இருக்க வேண்டியவன் என்றார். இவைகள் எல்லாம், இயேசுவிற்கு தாய்பற்று இல்லை என்று சொல்ல முடியாது. விரைவில் இந்த உலகை விட்டு விண்ணுலகம் செல்லப் போவதை அறிந்து... பெரிய பாசத்தை, எதிர்பார்ப்பை தன் தாயின் உள்ளத்தில் ஏற்படுத்திக் கொள்ளக் கூடாது என்று எண்ணி இப்படி செயல்பட்டார் என்றே எண்ண முடிகிறது.

ஆனாலும் கடைசி நேரத்தில் தன் தாய் அன்பையும் தன் கடமை உணர்வையும் சிலுவையில் வெளிப்படுத்தி இதோ உன் தாய், இதோ உன் மகன் என்றார் என்றும் சொல்லலாம்.

இயேசு கிறிஸ்து சிலுவையில் அறையப்படும்போது இருந்த வரலாற்று பின்னணியை சற்று பார்ப்போம். சீஷர்களில் யோவான் மிகவும் சிறியவனாக இருந்தார். இயேசு கிறிஸ்துவின் மார்பில் சாய்ந்து கொண்டிருந்த அவன் சீஷர்களில் சிறியவன் என்றே சொல்ல முடியும். திருமறை வசனத்தின்படி இயேசு சிலுவையில்

அறையப்பட்டபோது ‘‘**இயேசு சிலுவையினருகே அவருடைய தாயும், அவருடைய தாயின் சகோதரி கிலேயோப்பா மரியாளும், மகதலேனா மரியாளும் நின்று கொண்டிருந்தார்கள்**’’ – யோவான் 19;25. அங்கு அவர்களோடு யோவானோ வேறு சீஷர்களோ உடன் இல்லை என்று அறிகிறோம். இயேசு இருந்தபோது அவரால் சுகம் பெற்றவர்கள், அவர் மீது அன்பு கொண்டவர், அவரால் உயிர்த்தெழுந்தவர்கள், உறவினர் என்று பலரும் இருந்தனர். ஆனால் அவர்களில் யாரும் அங்கு இல்லை. இதற்கு காரணம் காண முற்பட்டால் ரோம வீரர்கள் யாரையும் சிலுவையின் அருகே அனுமதிக்கவில்லை என்றே அறியலாம். சாதாரண விபத்து என்றாலே ஆயிரமாயிரமாய் கூடும் மக்கள் கூட்டம், இயேசுவின் சிலுவை மரணத்தின் போது உடன் இல்லை. ஏன் என்று எண்ணிப் பார்க்க வேண்டும். இது ஒரு காரணம் இருக்க திருமறையை நன்கு ஆராய்வோம். அப்பொழுது சிலுவையின் பாடுகள்போது இயேசுவின் சிலுவை அருகில் இருந்த சீஷன் யார்? யோவானா? பேதுருவா? அல்லது வேறு யாராவதா? என்ற வினாவிற்கு விடை காண முடியும்.

இயேசுவுக்கு எத்தனை சீஷர்கள் என்றால் எந்த தயக்கமும் இல்லாமல் 12 என்று எல்லாரும் சொல்வார்கள். ஆனால் இந்த 12 பேர்களும் சீஷர்கள் மட்டுமல்ல, சீஷர்களிடமிருந்து அப்போஸ்தலர்களாக பிரித்தெடுக்கப்பட்டவர்கள் என்பதை நாம் அறிய வேண்டும். லூக்கா 6ஆம் அதிகாரத்தில் ‘‘**அந்த நாட்களில் அவர் ஜெபம் பண்ணும்படி ஒரு மலையின் மேல் ஏறி, இரா முழுவதும் தேவனை நோக்கி ஜெபம் பண்ணிக் கொண்டிருந்தார். பொழுது விடிந்தபோது அவர் தம்முடைய சீஷர்களை வரவழைத்து, அவர்களில் பன்னிரண்டு பேரைத் தெரிந்துகொண்டு, அவர்களுக்கு அப்போஸ்தலர் என்று பெயரிட்டார்.**’’ – லூக்கா 6:12,13

இதன் மூலம் இந்த பன்னிரண்டு பேரும் வெறும் சீஷர்கள் மட்டுமல்ல, அப்போஸ்தலர்களாக தேவ ஊழியத்திற்காக, அதற்கு மட்டும் இயேசு கிறிஸ்துவினால், தேவ சித்தத்தின்படி பிரித்தெடுக்கப்பட்டவர்கள் என்பதை மறந்துவிடக் கூடாது. இயேசுவைப் பின்பற்றியவர்கள், விசுவாசித்தவர் எல்லாருமே இயேசுவின் சீஷர்கள் என்றே அழைக்கப்பட்டனர்.

''இதோ உன் தாய்'' என்று இயேசு கிறிஸ்து அன்பாயிருந்த அப்போஸ்தனைப் பார்த்து என்று சொல்லப்பட்டிருந்தால் நாம் நிச்சயமாக அது யோவானிடம் சொல்லப்பட்டது என்று சொல்லலாம். யோவான் 21:7இல் ''**ஆதலால் இயேசுவுக்கு அன்பாயிருந்த சீஷன் பேதுருவைப் பார்த்து**'' என்றும் எழுதப்பட்டிருக்கிறது என்பதையும் நினைவுகூற வேண்டும்.

மாற்கு 15:40, 41இல் ''**சில ஸ்திரீகளும் தூரத்திலிருந்து பார்த்துக் கொண்டிருந்தார்கள். அவர் கலிலேயாவிலிருந்தபோது அவருக்கு பின் சென்று ஊழியம் செய்து வந்த மகதலேனா மரியாளும், சின்ன யாக்கோபுக்கும் யோசேக்கும் தாயாகிய மரியாளும், சலோமே என்பவளும், அவருடனே கூட எருசலேமுக்கு வந்திருந்த போதே, அநேக ஸ்திரிகளும் அவர்களோட இருந்தார்கள்**'' என்று எழுதப்பட்டிருக்கிறது. ஆகையால் இயேசு சிலுவையில் அறையப்பட்டபோது, ஆண்கள் யாரும் அருகில் இருக்க அனுமதிக்கப்பட்டதாகத் தெரியவில்லை.

இயேசுவிடம் கோபமாயிருந்த யூதர்கள் அவருடைய சீஷர்களை, இயேசு கிறிஸ்து சிலுவையில் அறையப்பட்டபின் அவர்கள் மேல் கோபமாகத்தான் இருந்திருப்பார்கள். அவர்கள் இவர்களை அனுமதித்திருப்பார்களா? போன்ற வினாவிற்கு விடை காணவேண்டும்.

இயேசு பிடிக்கப்படும்போது என்ன நடந்தது?

''**அப்பொழுது எல்லாரும் அவரை விட்டு ஓடிப் போனார்கள்**'' – மாற் 14:50.

லூக்கா 23:48,49–இல் ''**இந்த காட்சியை பார்க்கும்படி கூடி வந்திருந்த ஜனங்களெல்லோரும் சம்பவித்தவைகளைப் பார்த்தபோது, தங்கள் மார்பில் அடித்துக் கொண்டு திரும்பிப் போனார்கள். அவருக்கு அறிமுகமானவர்கள் எல்லோரும் கலிலேயாவிலிருந்து அவருக்குப் பின் சென்று வந்த ஸ்திரிகளும் தூரத்திலே இவைகளைப் பார்த்துக் கொண்டிருந்தார்கள்.**''

இவற்றை சற்று கூர்ந்து கவனித்தால் அருகில் சீஷர்கள் யாரும் இருந்திருக்க அனுமதிக்கப்பட்டிருக்க மாட்டார்கள். அப்படியானால் '**இதோ உன் தாய்**' என்று இயேசு சொன்ன சீஷன் யார்? அவன் மட்டும் எப்படி சிலுவை அருகில் இருக்க அனுமதிக்கப்பட்டான்? என்று கேட்கக் கூடும்.

இயேசுவைப் பிடிக்க பட்டயத்தோடும் தடியோடும் வருகிறார்கள். இயேசு ''**நான் தினமும் உங்கள் மத்தியில் உபதேசம் பண்ணிக் கொண்டிருக்கிறேன். அப்பொழுது நீங்கள் என்னை பிடிக்கவில்லையே**'' என்று அவர்களிடம் பேசிக் கொண்டிருக்கிறார். இது மத்தேயு 26:55இல் பார்க்கிறோம். அடுத்த வசனத்தில் ''**சீஷர்களெல்லோரும் அவரை விட்டு ஓடிப் போனார்கள்**'' – என்று மத் 26:56இல் என்று சொல்லப்பட்டிருக்கிறது.

யோவான் 16:32இல் – ''**இதோ, நீங்கள் சிதறுண்டு, அவனவன் தன் தன் இடத்திற்குப் போய், என்னைத் தனியே விட்டு விடுங்காலம் வரும், அது இப்பொழுது வந்திருக்கிறது. ஆனாலும் நான் தனித்திறேன், பிதா என் கூடவே இருக்கிறார்**'' என்ற இயேசு கிறிஸ்துவின் கூற்றைக் காண்கிறோம்.

இந்த வசனங்களின் அடிப்படையில் நாம் ஆராய முற்பட்டால் மிகவும் வயதில் சிறியவனாக இருந்த யோவான் இயேசு கிறிஸ்து சிலுவையில் அறையப்பட்டபோது உடன் இருந்திருக்க முடியாது.

கர்த்தராகிய இயேசு கிறிஸ்து மறைந்து பல வருடங்கள் ஆன பின்னும் கூட யோவான் தனித்து தன் ஊழியத்தைச் செய்யவில்லை என்றும் காண்கிறோம். சவுல், பர்னபா இருவரும் ஊழியம் செய்து கொண்டிருக்கும்போது, பல நாடுகளுக்குச் சென்று தங்கள் ஊழியத்தை நடத்திக் கொண்டிருந்தார்கள். இவர்கள் கப்பல் மூலம் சீப்புரு தீவுக்குச் சென்று அதன் பின்னர் சாலமி பட்டணத்திற்கு வந்து தங்கள் இறை பணியைத் தொடர்ந்தார்கள் என்று அப்போஸ்தலர் 14:4,5ல் காண்கிறோம். அப்போஸ்தலர் 13:5இல் இவர்கள் '**சாலமி பட்டணத்திற்கு வந்தபோது அவர்கள் யூதருடைய ஜெப ஆலயங்களில் தேவ வசனத்தைப் பிரசங்கித்தார்கள். யோவானும் அவர்களுக்கு உதவிக்காரனாக இருந்தான்**' என்று காண்கிறோம். அவர்களோடு இணைந்து ஊழியம் செய்யும் வயதில் யோவான் இல்லை என்று இதனால் அறிய முடிகிறது. அதன் பின்னர் தேவன் யோவானுக்கு இரண்டாம் வருகையின் வெளிப்பாட்டை அவனுக்குத் தந்து வல்லமையாகப் பயன்படுத்தினார் என்பதை பின்னர் அறிகிறோம்.

'இதோ உன் தாய்' என்று 12 அப்போஸ்தலர்களில் ஒருவனாக இருந்த யோவானிடம் சொல்லவில்லை என்றால், வேறு யாரிடம் சொல்லி இருக்க முடியும்? என்ற குழப்பம் இதைப் படிக்கும்போது

ஏற்பட்டிருக்கும். இதை கிறிஸ்து யோவானிடம் மட்டுமல்ல மற்ற எந்த அப்போஸ்தலரிடமும் சொல்லி இருக்க மாட்டார் என்று சொல்ல சில ஆதாரங்களைப் பார்ப்போம்.

இயேசு கிறிஸ்து இரவு முழுவதும் ஜெபத்திலிருந்து 12 பேரை சீஷர்களிடமிருந்து பிரித்து அவர்களை தேவனுடைய ராஜ்ஜியத்தைப் பற்றி பிரசிங்கிக்கவே தெரிந்து கொண்டார்.

''இயேசு கிறிஸ்துவின் ஊழியக்காரனும் அப்போஸ்தலனாகும்படி அழைக்கப்பட்டவனும், தேவனுடைய சுவிசேஷத்திற்காக பிரித்தெடுக்கப்பட்டவனுமாகிய பவுல்'' – ரோமர் 1:1 என்று அப்போஸ்தலரைப் பற்றிய விளக்கத்தை பவுல் இதில் தருகிறார். இந்த 12 அப்போஸ்தர்களும் இறைப் பணிக்கென்றே தனியே பிரித்தெடுக்கப்பட்டவர்கள். இதில் எந்த மாறுபட்ட கருத்தும் இருக்க முடியாது. இப்பொழுது இயேசு எதற்கு அவர்களைத் தெரிந்து கொண்டார் என்று பார்ப்போம்.

இந்த பன்னிருவரையும் அனுப்புகையில் அவர்களுக்கு கட்டளையிட்டு சொன்னது என்னவென்றால், **''நீங்கள் புறஜாதியார் நாடுகளுக்குப் போகாமலும் பிரவேசியாமலும், காணாமற் போன ஆடுகளாகிய இஸ்ரவேல் வீட்டாரிடத்திற்குப் போங்கள். போகையில் பரலோக ராஜ்யம் சமீபித்திருக்கிறது என்று பிரசங்கியுங்கள். வியாதியுள்ளவர்களை சொஸ்தமாக்குங்கள். குஷ்ட ரோகிகளை சுத்தம் பண்ணுங்கள், மரித்தோரை எழுப்புங்கள், பிசாசுகளைத்துரத்துங்கள். இலவசமாய் பெற்றீர்கள், இலவசமாய் கொடுங்கள்''** – மத்தேயு 10: 5, 6, 7, 8.

என்று வியாதியின் மேலும், பிசாசின் மேலும், தன் வல்லமை யையும் அதிகாரத்தையும் அவர்களுக்கு தந்தார்.

இயேசு கிறிஸ்து ஊழியத்திற்காக பிரித்தெடுத்த அப்போஸ்தலர் களிடம் அவர்கள் தங்கள் ஊழியத்தை எப்படிச் செய்ய வேண்டும் என்று சில வழிகாட்டுதலை (GUIDELINES) தருகிறார்.

''ஒரு வீட்டில் பிரவேசிக்கிறபோது, இந்த வீட்டுக்குச் சமாதானம் உண்டாவதாக என்று முதலாவது சொல்லுங்கள். சமாதான பாத்திரன் அங்கே இருந்தால், நீங்கள் கூறின சமாதானம் அவனிடத்தில் தங்கும். இல்லாதிருந்தால் அது உங்கள் இடத்திற்கு திரும்பிவிடும். அந்த வீட்டிலே நீங்கள் தங்கியிருந்து, அவர்கள்

கொடுக்கிறவைகளைப் புசித்து குடியுங்கள். வேலையாள் தன் கூலிக்குப் பாத்திரனாயிருக்கிறான். வீட்டிற்கு வீடு போகாதீர்கள். ஒரு பட்டணத்திலுள்ள பணியாளர்களை சொஸ்தமாக்கி தேவனுடைய ராஜ்ஜியம் உங்களுக்கு சமீபமாய் வந்திருக்கிறது என்று அவர்களுக்கு சொல்லுங்கள்'' லூக்கா 10:5–9.

ஒரு வீட்டின் சமாதானத்திற்கு ஏதுவாக வியாதிகளை சொஸ்தமாக்கி, தேவ ராஜ்ஜியத்தின் செய்திகளை சொல்லவே அவர்களை அனுப்பினார். மற்றும் தனியே செல்ல சொல்லவில்லை. இருவராகச் செல்ல சொல்கிறார். இந்தப் பணி தான் தெரிந்து கொண்ட 12 பேர்களுக்கு மட்டுமல்ல.. அவருடைய சீஷர்களாக வந்த எழுபது பேர்களுக்கும் சொல்லப்பட்டது லூக்கா 10:17இல் காண்கிறோம்.

அவருடைய சீஷர்களாக வந்தவர்கள் பலர் இருந்தார்கள். ஆனால் அவர்களில் அப்போஸ்தலராக 12 பேரை மட்டுமே அவர் தெரிந்து கொண்டார்.

சட்டசபையில் 233 சட்டமன்ற உறுப்பினர்கள் இருந்தார்கள் என்றால் அவர்களில் 20 அல்லது 30 பேரை மட்டும் அமைச்சராக தெரிந்து கொள்ளப்பட்டு, அவர்களுக்கு அரசுப் பணி ஒதுக்கப்படுகிறது. அமைச்சர்கள் தன் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் பணியை செய்ய முற்பட மாட்டார்கள். அதுபோன்றே ஒரு நிலை சீஷர்களுக்கும், அப்போஸ்தலர்களுக்கும் இருந்துள்ளது என்று கருதலாம். இயேசு கிறிஸ்து வாழ்ந்த காலத்தில் நடந்த நிகழ்ச்சிகளைப் பார்ப்போம்.

''தகப்பனையாவது தாயையாவது என்னிலும் அதிகமாய் நேசிக்கிறவன் எனக்கு பாத்திரன் அல்ல; மகனையாவது மகளையாவது என்னிலும் அதிகமாய் நேசிக்கிறவன் எனக்கு பாத்திரன் அல்ல. தன் சிலுவையை எடுத்து கொண்டு என்னை பின்பற்றாதவன் எனக்கு பாத்திரன் அல்ல''– மத்தேயு 10:37, 38.

முழுநேர ஊழியத்திற்காக தெரிந்து கொள்ளப்பட்ட சீஷர்களுக்கு, அப்போஸ்தலர்களுக்கு குடும்பம் ஒரு சுமையாக இருக்கக் கூடாது என்கிறார்.

மத்தேயு சுவிசேஷம் 8ஆம் அதிகாரத்தில் மற்றொரு நிகழ்ச்சியையும் காண்கிறோம்.

''அவருடைய சீஷர்களில் வேறொருவன் அவரை நோக்கி, ஆண்டவரே! முன்பு நான் போய், என் தகப்பனை அடக்கம் பண்ண எனக்கு உத்தரவு கொடுக்க வேண்டும் என்றான். அதற்கு இயேசு: மரித்தோர் தங்கள் மரித்தோரை அடக்கம் பண்ணட்டும். நீ என்னை பின்பற்றி வா என்றார்.'' – மத்தேயு 8:21,22.

தன் தந்தையின் மரணத்திற்கு, உடலை அடக்கம் செய்ய போய்வர அனுமதி கேட்கும்போது இயேசு இவ்விதம் சொன்னதாகப் பார்க்கிறோம். அப்படியிருக்க ஊழியத்திற்காக பிரித்தெடுக்கப்பட்ட தன் சீஷனான யோவானிடம் தன் தாயை காக்கும் பொறுப்பை தந்திருப்பாரா? தன் தாயை காக்கும் நிலையில் யோவான் இருந்திருக்க முடியுமா? தாய், மகன் என்ற உலக உறவிற்கு தன் சீஷனை அழைத்திருப்பாரா? என்றெல்லாம் எண்ணத் தோன்றுகிறது.

இவற்றின் அடிப்படையில் இயேசு யாரிடம் இதோ உன் தாய் என்று சொல்லியிருக்கக் கூடும்? அதற்கு திருமறையில் எந்த வசனத்தின் அடிப்படையில் பதில் காண முடியும் என்று, நாம் திருமறையை பரிசுத்த ஆவியானவரின் உதவியோடு விடை காண்போம்.

நமது திருமறையில் இயேசு கிறிஸ்துவின் அப்போஸ்தலர் பன்னிரண்டு பேர்களின் பெயரை காண்கிறோம். இந்த பன்னிரண்டு சீஷர்கள் இல்லாமல் இன்னொரு சீஷன் பெயரை மத்தேயு, மாற்கு, லூக்கா, யோவான், சுவிசேஷ புத்தகங்களில் காண முடிகிறது.

அந்த சீஷன் யார்? எப்படிப்பட்டவன்? என்ன தகுதி பெற்றவன்? இயேசுவின் உள்ளத்தில் இடம் பெற்றவனா? சமுதாயத்தில் அவன் தகுதி என்ன? என்பதை நன்கு ஆராய்ந்தால், 'இதோ உன் தாய்' என்று இயேசு கிறிஸ்து அவனிடம் சொல்லியிருக்கக் கூடும் என்ற முடிவிற்கு நாம் வரக் கூடும். அவனைப் பற்றி இப்பொழுது பார்ப்போம்.

மத்தேயு 27:57,58 – **''சாயங்காலமானபோது இயேசுவுக்கு சீஷனும் ஐசுவரியமானுமாயிருந்த யோசேப்பு என்னும் பேர் கொண்ட அரிமத்தியா ஊரானாகிய ஒரு மனுஷன் வந்து, பிலாத்துவினிடத்தில் போய், இயேசுபிரான் சரீரத்தைக் கொடுக்கும்படி கேட்டான். அப்பொழுது சரீரத்தைக் கொடுக்கும்படி பிலாத்து கட்டளையிட்டான்''**

இந்த வசனத்தின் அடிப்படையில் யோசேப்பு தகுதியை ஆராய்வோம். இவன் இயேசுவுக்கு சீஷன். ஐசுவரியவான், பெரும் பணக்காரன். அரிமத்தியா என்ற ஊரைச் சேர்ந்தவன்.

பிலாத்துவிடம் இயேசு கிறிஸ்துவின் உடலைத் தரும்படி கேட்கக் கூடிய தகுதி, தைரியம் பெற்ற இவன் ரோமர்கள் ஆட்சி காலத்தில் மதிப்புப் பெற்ற ஒருவனாக இருக்க வேண்டும் என்று அறிகிறோம். மற்றும் இயேசு மரிக்கும்போது ஐசுவரியனோடு இருந்தார் என்ற வேத வார்த்தையையும் நினைவுகூற வேண்டும்.

மாற்கு 15:43 – ''**கனம்பொருந்திய ஆலோசனைக்காரனும் அரிமத்தியா ஊரானும் தேவனுடைய ராஜ்ஜியம் வரக் காத்திருந்த வனுமாகிய யோசேப்பு என்பவன் வந்து பிலாத்துவிடம் துணிந்து போய், இயேசுவின் சரீரத்தைக் கேட்டான்.**''

இந்த வேத வசனம் இவனை கனம் பொருந்தியவன் என்கிறது. சமுதாயத்தில் மதிப்பும், பதவியும் உடையவனாக இருக்க வேண்டும்.

ஆலோசனையில் வல்லவன். தேவ ராஜ்ஜியத்தைப் பற்றி கேட்டு அறிந்து விசுவாசித்து அதற்காக காத்திருக்கும் உண்மையான பக்தியை உடையவன். பெரும் பதவியிலிருந்த பிலாத்துவிடம் துணிந்து போய் கேட்கும் அளவிற்கு துணிவுடையவன் என்று காண்கிறோம்.

இயேசு கிறிஸ்து பிடிபட்டபோது பேதுருவைத் தவிர யாரும் உடன் இருந்ததாக வேதத்தில் இல்லை. எல்லாம் ஓடி மறைந்து கொண்டனர். பேதுருவும் தன்னை இயேசுவின் சீஷன் என்று சொல்ல பயந்து மறுதலித்தான். யோவானோ அருகில் இருந்ததற்கு எந்த ஆதாரமும் இல்லை. யோசேப்பு மட்டுமே தகுதியுடையவனாக இருந்தான்.

லூக்கா 23:49, 50, 51. – ''**அவருக்கு அறிமுகமானவர்களெல்லாரும், கலிலேயாவிலிருந்து அவருக்குப் பின் சென்று வந்த ஸ்திரீகளும் தூரத்திலே நின்று இவைகளைப் பார்த்துக் கொண்டிருந்தார்கள். யோசேப்பு என்னும் பேர் கொண்ட ஒரு ஆலோசனைக்காரன் இருந்தான்; அவன் உத்தமனும் நீதிமானுமாயிருந்தான். அவன் யூதருடைய பட்டணங்களிலொன்றாகிய அரிமத்தியாவி லிருந்து வந்தவனும், தேவனுடைய ராஜ்ஜியத்திற்கு காத்திருந் தவனும், யூதர்களுடைய ஆலோசனைக்கும் செய்கைக்கும்**

சம்மதியாதவனுமாயிருந்தான்'' என்று லூக்கா எழுதுகிறார். அவருக்கு அறிமுகமானவர்கள் தூரத்திலிருந்து வேடிக்கை பார்க்கிறார்கள். இவர்களில் ரோமர் கூட்டத்திற்கு எதிர்த்து அருகில் வர முடியாது. அந்த நேரத்தில் யோசேப்பு என்ற ஆலோசனைக்காரன் இயேசுவின் உடலைக் கேட்டு அடக்கம் செய்கிறான்.

ஆலோசனைக்காரன் என்பதற்கு ஆங்கிலத்தில் என்ன பொருள்பட வருகிறது என்பதைப் பார்ப்போம். ஆங்கிலத்தில் ஆலோசனைக்காரன் என்பதை HONOURABLE COUNSELLOR என்று மொழிபெயர்க்கப்பட்டிருக்கிறது. மதிப்பிற்குரிய மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினராக யோசேப்பு இருந்திருக்க வேண்டும். பெரும் பதவியில் இருந்தாலும் அவன் நீதிமானாக இருந்தான். இயேசு கிறிஸ்துவுக்கு எதிராக யூதர்கள் திட்டம் தீட்டுவதை அவன் அறிந்திருந்தான். ஆனால் அதை ஏற்றுக் கொள்ளாத இயேசு கிறிஸ்துவின் அன்பிற்குரிய அந்தரங்க சீஷனாக யோசேப்பு இருந்துள்ளான் என்று இதன் மூலம் அறிய முடிகிறது.

யோசேப்பைக் குறித்து யோவான் என்ன சொல்லுகிறார் என்று பார்ப்போம். யோவான் 19:38 – ''**இவைகளுக்குப் பின்பு அரிமத்தியா ஊரானும் யூதருக்கு பயந்ததினால் இயேசுவுக்கு அந்தரங்க சீஷனுமாகிய யோசேப்பு இயேசுவின் சரீரத்தை எடுத்துக் கொண்டு போகும்படி பிலாத்துவிடம் உத்தரவு கேட்டான். பிலாத்து உத்தரவு கொடுத்தான். ஆகையால், அவன் வந்து இயேசுவின் சரீரத்தை எடுத்துக் கொண்டு போனான்**'' என்று எழுதுகிறார்.

புதிய ஏற்பாடு கிரேக்க மொழியிலிருந்து நேரிடையாக தமிழில் மொழிபெயர்க்கப்பட்டிருக்கிறது. அந்தரங்க சீஷன் என்பது தமிழ் மொழிபெயர்ப்பின்படி PERSONAL என்றும் பொருள்படக் கூடும். ஆங்கில மொழிபெயர்ப்பின்படி 'ரகசிய' சீஷன் என்று பொருள்பட எழுதப்பட்டுள்ளது.

தமிழ் மொழிபெயர்ப்பின் படி PERSONAL 'தனி' என்ற பொருள்பட கண்டால், உதாரணமாக ஒரு அமைச்சருக்கு பல தனி அலுவலர்கள் இருப்பார்கள். அவர் அவருடைய துறை சார்ந்தவற்றை மட்டும் கவனிப்பார்கள். அவர்களில் ஒருவர் அமைச்சருக்கு நெருங்கிய நம்பிக்கைக்குரிய ஒருவராக இருப்பார். அமைச்சரின் தனிப்பட்ட துறை சார்ந்த காரியங்களை அவர் கவனிப்பார்.

மொழிபெயர்ப்பில் மாறுபட்ட கருத்துக்கள் தோன்றுவதால் அந்தரங்க சீஷன் என்பதை எப்படி ஏற்பது என்று உறுதியாகச் சொல்ல முடியாத நிலை இருப்பினும், இயேசு கிறிஸ்துவின் பன்னிரண்டு சீஷர்களுக்கும் இல்லாத தகுதி இந்த யோசேப்பிற்கு உண்டு என்பதை மறுக்க முடியாது. இதோ உன் தாய் என்று இயேசு யோசேப்பிடம் சொல்லி இருக்க வேண்டும் எனலாம்.

இயேசு சிலுவையில் அறைந்தபோது அருகில் அவருடைய சீஷர்கள் யாரும் உடன் இருந்திருக்க முடியாது. ஆனால் பெரும்பகுதி, செல்வாக்கு இவற்றின் அடிப்படையில் யோசேப்பு மட்டுமே உடன் இருந்திருக்க வேண்டும்.

இது தொடர்பாக இன்னொரு நிகழ்ச்சியையும் நினைவு கூறலாம்.

‘‘**சீமோன் பேதுருவும் வேறொரு சீஷனும் இயேசுவுக்குப் பின் சென்றார்கள். அந்த சீஷன் பிரதான ஆசாரியனுக்கு அறிமுகமானவனாக இருந்ததினால், இயேசுவோடு கூடப் பிரதான ஆசாரியனுடைய அரண்மனைக்குள் பிரவேசித்தான். பேதுரு வாசலருகே வெளியே நின்றான். அப்பொழுது பிரதான ஆசாரியனுக்கு அறிமுகமானவனாயிருந்த மற்ற சீஷன் வெளியே வந்து, வாசல் காக்கிறவர்களுடனே பேசி, பேதுருவை உள்ளே அழைத்துக் கொண்டு போனான்.**’’ – யோவான் 18:16.

இங்கு யோவான் குறிப்பிடும் மற்ற சீஷன் யாராக இருக்க முடியும்? பிரதான ஆசாரியனுக்கு அறிமுகமாக இருந்தவன், பிரதான ஆசாரியனின் அரண்மனைக்குள் செல்ல அனுமதி பெற்றவன், அங்கு காவல் காக்கும் சிப்பந்திகள் மத்தியிலும் மதிப்பு மிக்கவன், இப்படிப்பட்ட சீஷன் திருமறையில், நாம் காணும் சீஷர்களில் யாராக இருக்க முடியும்?

யூதர்கள் மத்தியிலும், ரோம ஆட்சியாளர்கள் மத்தியிலும் கனம் பொருந்தியவன் யாராக இருக்க முடியும்? இயேசுவை கடைசி வரை பின்பற்றிச் சென்றவன் பேதுருவாகத்தானே வேதம் காட்டுகிறது. இதை எழுதிய யோவான் தானும் உடன் சென்றான் என்று எழுதவில்லையே!

இப்படி உள்ளத்தில் எழும்பும் வினாக்களுக்கு விடை காண முற்பட்டால் அது திருமறையில் நான்கு சுவிசேஷங்களிலும் சொல்லப்பட்ட, இயேசு கிறிஸ்துவின் பன்னிரண்டு சீஷர்களைத்

தவிர ஒரே ஒரு சீஷன் யோசேப்பு மட்டுமே என்பதை மறுக்க முடியாது.

இவற்றை எல்லாம் மனதில் கொண்டு இதை ஆராய முற்பட்டால், இயேசு கிறிஸ்து 'இதோ உன் தாய்' என்று சொன்ன வார்த்தை, அவர் அருகில் இருந்த, அதிகாரம், தகுதி இவைகளுக்குரிய ஒரே சீஷனாக யோசேப்பாகவே இருக்க முடியும் எனக் கூறலாம்.

இதுபற்றி எழுதிய பரிசுத்தவான்கள், தேவ ஊழியர்கள் எல்லாரும் யோவானிடமே இதைக் கூறினார் என்று எழுதியுள்ளார்கள். திருமறை இருபுறம் கருக்குள்ள பட்டையம். தேவனுடைய வெளிப்பாடு எனக்கு மாறுபட்டதாக இருக்கக் கூடும். பின்னால் சொல்லப்பட்ட நான்கு வார்த்தைகளுக்கும் எனது கருத்து மாறுபட்டதாகவே இருக்கிறது. '**ஆவிக்குரியவன் நிதானித்து அறிகிறான்**' என்ற வேதவாக்கின்படி, திருமறையை படிப்பவர்கள் ஆவிக்குரியவர்களாக படித்து, தேர்ந்து பயனடைய வேண்டும் என விரும்புகிறேன்.

மற்ற பரிசுத்தவான்கள் எழுதியது, கருதியது தவறு என்று நான் எண்ணவில்லை, சொல்லவில்லை. இதுவரை நான் எழுதிய புத்தகங்கள் எல்லாம் சமய வரலாற்று ஆய்வின் பிரதிபலிப்பாகவே இருக்கும். பாறை ஓவியங்கள், கல்வெட்டுகள் பற்றியும் நான் கண்ட கருத்து மற்றவர்கள் கருத்துக்கு வேறுபட்டதாக இருந்தாலும், என் ஆய்விற்கும் சிந்தனைக்கும் முடிவிற்கும் அடிப்படை ஆதாரம் நமது திருமறையாகவே இருக்கும்.

திருமறையின் அடிப்படையில்தான் ஆய்வும் தொடக்கமும், முடிவும் இருக்கும் என்பதை படிப்பவர்கள் நன்கு அறிவார்கள். அடுத்து நான்கு வார்த்தைகளையும் பார்ப்போம்.

இடைப்பட்டநேரம்

இயேசு கிறிஸ்து சிலுவையில் சொன்ன மூன்று வார்த்தைகளுக்குப் பின் சில மணி நேரம் மௌனமாக இருந்திருக்கிறார். பின்னர் மதியம் 3 மணி அளவில்தான் கடைசி நான்கு வார்த்தைகளையும் பேசி இருக்கிறார் என்று வேத பண்டிதர்கள், வரலாற்று சமய ஆய்வாளர்கள் எல்லாரும் கருதுகிறார்கள்.

சிலுவை நேரத்தைப் பற்றிய வேத பண்டிதர்கள் கருத்தைக் காண்போம். இயேசு கிறிஸ்து சிலுவையில் முதல் மூன்று

வார்த்தைகளை காலை 9 மணி முதல் மதியம் வரை சொன்னதாக வரிசைப்படுத்தி இருக்கிறார்கள். மதியம் முதல் 3 மணி வரை இயேசு கிறிஸ்து எதுவும் பேசவில்லை. பிற்பகல் 3 மணிக்கு கடைசி நான்கு வசனங்களைப் பேசி இருக்கிறார்

இவர்கள் கருத்தின்படி, திருமறையில் சிலுவை வசனமாகச் சொல்லப்பட்ட மூன்று வார்த்தைகள் இயேசு இந்த பூலோகத்திலுள்ள மனிதர்களுக்காக, மனிதர்களைக் குறித்து பேசியதாகக் காண்கிறோம்.

மதியம் முதல் மாலை மூன்று மணி வரை அவருடைய மௌனத்தை, பாடுகளின் நேரம் என்று கருத முடியாது. இயேசு கிறிஸ்து ஆவியில் பிதாவாகிய தேவனோடு உரையாடிக் கொண்டிருந்தார் என்பதே சரியான முடிவாகும்.

முதல் மூன்று வார்த்தை இயேசு கிறிஸ்து தானாக கூறப்பட்டிருப்பதையும், கடைசி நான்கு வார்த்தைகளும், தாவீதின் குமாரனாகிய இயேசு கிறிஸ்து தாவீது கூறிய வார்த்தைகளை மட்டுமே பேசி இருப்பதையும் ஆய்வு கண்ணோட்டத்தில் காண வேண்டும். தேவன் பரிசுத்த ஆவியினால் தாவீதுக்கு வெளிப்படுத்தி எழுதச் செய்த சங்கீத வசனங்களில் உள்ளவற்றை மட்டுமே இயேசு கிறிஸ்து கடைசி நான்கு வார்த்தைகளாக சிலுவையில் சொன்னார் என்பதை இயேசுவை மனிதனாக எண்ணி சிந்தியாமல் தேவகுமாரனாக எண்ணிப் பார்க்கும் போது புலப்படும்.

இயேசு கிறிஸ்துவின் பிறப்பைப் பற்றி தீர்க்கதரிசனமாக வெளிப்படுத்திய ஏசாயா தீர்க்கதரிசி, ''**ஈசாயென்னும் அடி மரத்திலிருந்து ஒரு துளிர் தோன்றி, அதன் வேர்களிலிருந்து ஒரு கிளை எழும்பிச் செழிக்கும்.**'' – ஏசாயா 11:1 என்று எழுதுகிறார். திருமறையில் பல இடங்களில் தாவீதின் குமாரன் என்று இயேசு கிறிஸ்து அழைக்கப்படுகிறார். ஆகையால், இயேசு கிறிஸ்து பற்றி தேவன் தாவீதுக்கு பரிசுத்த ஆவியால் பின்னர் நடக்கப் போகும் காரியத்தை வெளிப்படுத்தி இருந்தார். அதன்படி தாவீது எழுதிய சங்கீதத்திலிருந்து இயேசு கடைசி நான்கு வார்த்தைகளையும் பேசினார் என்று எண்ணத் துணியலாம்.

''வேத வாக்கியங்களை ஆராய்ந்து பாருங்கள். அவைகளால் உங்களுக்கு நித்திய ஜீவன் உண்டானது எண்ணுகிறீர்களே,

என்னைக் குறித்து சாட்சி கொடுக்கிறவைகளும் அவைகளே'' யோவான் 5:39 என்று இயேசு கூறுகிறார்.

வேத வாக்கியங்களை ஆராய்ந்து பார்க்கும் நாம் வேதம் கூறுவது போல தேவனுக்குரியவைகளை தேவனுக்குரியவைகளாகவும் மனிதனுக்குரியவைகளை மனிதனுக்குரியதாகவும் பொருள் காண முற்பட வேண்டும்.

இந்த நேரத்தில் பவுல் கொரிந்தியருக்கு எழுதிய கடிதத்தில் குறிப்பிட்ட சில காரியங்களை நினைவு கூறுவது பொருத்தமாக இருக்கும் என்று எண்ணுகிறேன்.

''உங்களுடைய விசுவாசம் மனுஷருடைய ஞானத்திலல்ல, தேவனுடைய பெலத்தில் நிற்கும்படிக்கு என் பேச்சும் என் பிரசங்கமும் மனுஷ ஞானத்திற்குரிய நயவசனமுள்ளதாயிராமல், ஆவியினாலும் பெலத்தினாலும் உறுதிப்பட்டதாயிருந்தது.

அப்படியிருந்தும், தேறினவர்களுக்குள்ளே ஞானத்தைப் பேசுகிறோம். இப்பிரபஞ்சத்தின் ஞானத்தையல்ல, அழிந்து போகிறவர்களாகிய இப்பிரபஞ்சத்தின் பிரபுக்களுடைய ஞானத்தாலல்ல.

உலகத் தோற்றத்திற்கு முன்னே தேவன் நம்முடைய மகிமைக்காக ஏற்படுத்தினதும் மறைக்கப்பட்டதுமாயிருந்த இரகசியமான தேவஞானத்தையே பேசுகிறோம்.

அதை இந்தப் பிரபஞ்சத்துப் பிரபுக்களில் ஒருவனும் அறியவில்லை. அறிந்தவர்களானால், மகிமையின் கர்த்தரை அவர்கள் சிலுவையில் அறைய மாட்டார்களே'' – 1 கொரி 2:48. (சிலுவையில் அறையப்பட்டது கர்த்தராகிய இயேசு, மனிதரல்ல, தேவகுமாரனாக தேவசித்தத்தின்படி அனுப்பப்பட்டவர். சிலுவை வசனங்கள் அவரால் கூறப்பட்டது என்பதை மனதில் கொண்டு நாம் பார்க்க வேண்டும்)

மேலும் பவுல் என்ன எழுதுகிறார் என்று பார்ப்போம்.

''எழுதியிருக்கிறபடி தேவன் தம்மில் அன்பு கூருகிறவர்களுக்கு ஆயத்தம் பண்ணினவைகளைக் கண் காணவுமில்லை, காது கேட்கவுமில்லை, அவைகள் மனுஷனுடைய இதயத்தில் தோன்றவுமில்லை. நமக்கோ தேவன் அவைகளைத் தமது ஆவியாலே வெளிப்படுத்தினார். அந்த ஆவியானவர் எல்லாவற்றையும்

தேவனுடைய ஆழங்களையும், ஆராய்ந்திருந்தார். மனுஷரிலுள்ள ஆவியேயன்றி மனுஷரில் எவன் மனுஷக்குரியவைகளை அறிவான்? அப்படிப்போல, தேவனுடைய ஆவியேயன்றி ஒருவனும் தேவனுக்குரியவைகளை அறிய மாட்டான்.

நாங்களோ உலகத்தின் ஆவியைப் பெறாமல், தேவனால் எங்களுக்கு அருளப்பட்டவைகளை அறியும்படிக்கு தேவனிலிருந்து புறப்படுகிற ஆவியைப் பெற்றோம். அவைகளை நாங்கள் மனுஷ ஞானம் போதிக்கும் வார்த்தைகளாலே பேசாமல், பரிசுத்த ஆவி போதிக்கிற வார்த்தைகளாலே பேசி, ஆவிக்குரியவைகளை ஆவிக்குரியவைகளோடே சம்பந்தப்படுத்திக் காண்பிக்கிறோம்.

ஜென்ம சுபாவமான மனுஷனோ தேவனுடைய ஆவிக்குரிய வைகளை ஏற்றுக் கொள்ளான்; அவைகள் அவனுக்குப் பைத்தியமாகத் தோன்றும்; அவைகள் ஆவிக்கேற்ற பிரகாரமாய் ஆராய்ந்து நிதானிக்கப்படுகிறவைகளானதால், அவைகளை அறியவும் மாட்டான். ஆவிக்குரியவன் எல்லாவற்றையும் ஆராய்ந்து நிதானிக்கிறான்; ஆனாலும் அவன் மற்றொருவனாலும் ஆராய்ந்து நிதானிக்கப்பட்டான்.'' – 1 கொரிந்தியர் 2:9–15

என்று பவுல் எழுதினார். இயேசு ''**நான் பிதாவிலும் பிதா என்னிலும் இருக்கிறதை நீ விசுவாசிக்கிறதில்லையா? நான் உங்களுடனே சொல்லுகிற வசனங்கள் என் சுயமாய்ச் சொல்லவில்லை. என்னிடத்தில் வசமாயிருக்கிற பிதாவானவரே இந்த கிரியைகளைச் செய்து வருகிறார்**'' – யோவான் 14:10.

இவைகளின் அடிப்படையில் மீதி நான்கு சிலுவை வார்த்தைகளை ஆராய்வோம்.

கர்த்தராகிய இயேசு கிறிஸ்து நீண்ட இடைவெளிக்குப் பின் 4வது வார்த்தையைப் பேசுகிறார்.

4. என் தேவனே என் தேவனே ஏன் என்னை கைவிட்டீர்?

சில ஆண்டுகளுக்கு முன் எங்கள் ஆலயத்தில் சாட்சி கூறிய ஒரு பெண் ஒரு கடைக்காரர் தன்னிடம் நான் இயேசுவை கடவுளாக ஏற்றுக் கொள்ள மாட்டேன். அவர் கடவுள் என்றால் என் தேவனே என் தேவனே ஏன் என்னைக் கைவிட்டீர் என்று சொல்லி இருப்பாரா? என்றார் என்று சொன்னது என் நினைவிற்கு வருகிறது.

அவருடைய எண்ணமும் கேள்வியும் உண்மையும் நியாயமான தாகும். கிறிஸ்தவர்கள் சிந்திக்க வேண்டியவைகளாகும். நாமும் கிறிஸ்தவர்களாக இல்லாமல் அவர் நிலையில் இருந்தால் அப்படித்தான் சொல்லியிருப்போம். நானும் வேதத்தை ஆராய தவனாக இருந்தால் அப்படித்தான் எண்ணத் தோன்றும்.

இது 'அவர் சொன்னதுதான். ஆனாலும் அவர் சொன்னது இல்லை என்று நான் சொன்னால் நீங்கள் என்ன நினைப்பீர்கள்? ஆம் இயேசு தான் சொன்னார். ஆனால், அது அவருடைய வார்த்தை இல்லை.

சங்கீதம் 22:1–இல் ''**என் தேவனே, ஏன் என்னைக் கைவிட்டீர்?**'' என்று தாவீது சங்கீதத்தில் சொல்வதைப் பார்க்கிறோம். இந்த வார்த்தை அரமேய மொழியில் இயேசு கூறியதாகக் காண்கிறோம். இயேசு கிறிஸ்து பாடுகள் மத்தியிலே இதைச் சொன்னார் என்றும், உலக மக்களின் பாவங்கள் அவரைப் பற்றிய போது, தேவபிரசன்னம் அவரிடம் இல்லாமற் போயிற்று என்றும், ஆகையால்தான் இயேசு இவ்விதம் கூறினார் என்கிறார்கள்.

நீதியின் சூரியனான தேவன், இந்த உலகத்திற்கு நம்மை மீட்க ஒளியின் பிள்ளையாக அவதரித்த இயேசு கிறிஸ்துவுக்கும் இளைய மக்கள் பாவம் என்ற மேகம், காரிருள் அவர்களிடையே உள்ள பிரசன்னத்தை விலக்கி நிற்க, அந்த வேளையில் இயேசு இதைச் சொன்னார் என்பதே பலரும் கூறுகிறார்கள்.

''**ஆத்துமாவைக் கொல்ல வல்லவர்களாயிராமல், சரீரத்தை மாத்திரம் கொல்லுகிறவர்களுக்கு நீங்கள் பயப்பட வேண்டாம். ஆத்துமாவையும், சரீரத்தையும் நரகத்தில் அழிக்க வல்லவருக்கே பயப்படுங்கள்**'' – மத்தேயு 10:28–இல் சொல்லுகிற இயேசு இப்படிச் சொல்லியிருப்பாரா?

தேவன் தம் சித்தத்தின்படி நம் பாவங்களை சுமக்க, மீட்க அனுப்பிய தன் குமாரனை கை விடுவாரா? ஆபிரகாமிடம் உன் மகனை பலியிடு என்று தேவன் சொல்ல, ஆபிரகாம் கீழ்படிந்து தன் மகனை பலியிடச் சென்றபோது, பலியிடட்டும் என்று தேவன் காத்திருந்தாரா? அதன் பின் தன் மீது ஆபிரகாம் வைத்திருந்த விசுவாசத்தைப் பற்றி பேசினாரா? இல்லையே. அவர் பலியிடும்

முன்பே அதைத் தடுத்து நிறுத்திய தேவன், தன் மகனை கைவிடுவார் என்று எப்படிக் கருத முடியும்?

அப்படியே உலக பாடுகள் மத்தியில் இயேசு தன் உடலில் ஏற்பட்ட துன்பத்தால் சொல்லியிருந்தால் 'அய்யோ, அப்பா வலிக்குதே' என்று சொல்லியிருக்க மாட்டாரா? சுமார் 100 ஆண்டுகளுக்கு முன் தாவீது எழுதிய சங்கீதத்தின் வரியைத் தான் சொல்ல வேண்டுமா? அவர் வேறு விதத்தில் அல்லது வேறு வார்த்தையில் தன் துன்பத்தைச் சொல்லி இருந்தால், இயேசு பாவத்தின் நிழல் அவர் மீது படிய இப்படிச் சொன்னார் என்று கருத இடமுண்டு. இயேசு கிறிஸ்து பாவத்தைச் சுமக்க உலகில் வந்தார் என்பதால் பாவம் அவரைப் பற்றியது என்று எப்படிச் சொல்ல முடியும்?

உலகத் தோற்றத்தைப் பற்றி எழுதும் யோவான், ''**ஆதியிலே வார்த்தை இருந்தது. அந்த வார்த்தை தேவனிடத்திலிருந்தது. அந்த வார்த்தை தேவனாயிருந்தது. அவர் ஆதியிலே தேவனோடிருந்தார். சகலமும் அவர் மூலமாய் உண்டாயிற்று. உண்டானதென்றும் அவராலேயல்லாமல் உண்டாகவில்லை. அவருக்குள் ஜீவனிருந்தது. அந்த ஜீவன் மனுஷருக்கு ஒளியாயிருந்தது. அந்த ஒளி இருளிலே பிரகாசிக்கிறது; இருளானது அதைப் பற்றிக் கொள்ளவில்லை**'' – யோவான் 1:1–5.

இருளில் ஒளியாக வந்த இயேசு கிறிஸ்துவை பாவ இருள் பற்றிக் கொள்ளவில்லை. பற்றிக் கொள்ளவும் முடியாது.

ஆட்டை பலியிடும்போதும், ஆட்டை போக்கடாவாக விடும்போதும் பண்டைய யூத மக்களும், எபிரேய மக்களும் அந்த ஆட்டின் தலையில் கையை வைத்து தங்கள் பாவங்களை அது சுமந்ததாகச் சொல்லி பலியிட்டும், போக்கடாவாக விட்டும் வந்தனர் என்பதை பழைய ஏற்பாட்டில் காண்கிறோம். அதனால் ஆடு அவர்கள் பாவத்தை சுமந்ததா? அது ஒரு அடையாளமாகத்தானே கருதப்பட்டது. இயேசு கிறிஸ்து நம் பாவத்திற்கு பிராயச் சித்தமாகத்தானே கருதப்பட்டார். இயேசு கிறிஸ்து நம் பாவத்திற்கு பிராயச்சித்தமாக, ஜீவபலியாக தம்மை ஒப்புக் கொடுத்தார் என்பதால் பாவங்கள் அவர் மீது வந்தது, அவர் பாவியானார் என்று எப்படிச் சொல்ல முடியும்?

'**பிதாவும் நானும் ஒன்றாய் இருக்கிறோம்**' என்று சொன்னார். பரிசுத்தரான தேவன் மீதும் பாவ சுமை இருந்ததா? இருளும்

ஒளியும் ஒன்று சேர முடியுமா? **'என்னை அனுப்பினவர் என்னுடனே கூட இருக்கிறார். பிதாவுக்கு பிரியமானவைகளை நான் எப்போதும் செய்கிறபடியால் அவர் என்னைத் தனியேயிருக்கவிடவில்லை.'** யோவான் 8:29 என்று இயேசு கிறிஸ்து சொன்னாரே. அப்படியிருக்க பிதா எவ்விதம் அவரை கைவிட முடியும்? தேவகுமாரனை மனித குமாரனாக எண்ணி பொருள்பட ஏற்பதுதான். இந்த வார்த்தை தேவன் கூறியதாக எண்ண முடியும். மேலும் **'நான் சுயமாக பேசவில்லை. தேவனிடம் நான் கேட்டதையே பேசுகிறேன்'** என்றெல்லாம் இயேசு சொன்னாரே, அவைகள் எல்லாம் பொய்யாகி, என் தேவனே, என் தேவனே ஏன் என்னைக் கைவிட்டீர் என்பது மெய்யாயிற்றா? இதை எப்படி ஏற்றுக் கொள்ள முடியும்? வல்லமையுள்ள வார்த்தையாக இன்னும் இயேசு கிறிஸ்துவின் வார்த்தை வலிமை பெற்று இருக்கிறது என்பதை உணர்வோம். சாத்தானையும், வியாதியையும் விரட்டி, பாபக் கட்டுகள், சாபக் கட்டுகள் எல்லாவற்றையும் போக்க வல்ல அந்த வார்த்தைகளை வீண் வார்த்தைகளாக இருக்க முடியுமா?

ஒரு சமயம் மார்ட்டின் லூத்தர் ''ஏன் என்னைக் கைவிட்டீர்' என்ற வார்த்தையின் பொருளை அறிந்து கொள்ள முயன்றார். உபவாசமிருந்து யாருடனும் பேசாமல் அதை ஆழ்ந்து சிந்தித்தார். சில மணி நேரம் அமைதியான நிலையில் தியானித்தார். பின்னர் இருக்கையிலிருந்து எழுந்து அறையில் அங்குமிங்கும் உலாவினார். பின்னர் 'தேவன் தேவனால் கைவிடப்படுவதா? யாரால் அதை அறிந்து கொள்ள முடியும்?' என்று அவர் சொன்னதை அருகில் இருந்தவர்கள் கேட்டனர் என்று ஒரு புத்தகத்தில் படித்திருக்கிறேன்.

''**நம்முடைய மீறுதல்களினிமித்தம் அவர் காயப்பட்டு, நம்முடைய அக்கிரகங்களினிமித்தம் அவர் நொறுக்கப்பட்டார்**'' – ஏசாயா 53:5 என்பது உண்மையே. தேவன் நமது பாவத்திற்காக தம்மைத்தானே ஒப்புக் கொடுத்தார் என்பதால், நம்மை மீட்டுக் கொள்ள நம் மீது சுமத்தப்பட்ட தண்டனையை அவர் ஏற்றுக் கொண்டார் என்பதாம். அந்த பாவத்திற்கு அவர் காரணமாக முடியுமா? ஒரு தீவிரவாதியை தன் நாட்டிற்காக தன் உயிரைக் கொடுக்க மனித வெடிகுண்டாக மாறி, தன்னைத் தானே பலி கொடுக்க முன்வரும்போது... மகிழ்ச்சியுடன் அதை அவன் ஏற்றுக் கொள்ளும்போது, இந்த உலகத்தில் பிறக்கும் போது அதற்காகவே பிறந்த இயேசு கிறிஸ்து

அந்த சோதனையை அடைந்தபோது வருந்தி இவ்விதம் சொன்னார் என்று எப்படி எண்ண முடியும்? அப்படியானால் அவருடைய பிறப்பே வீண் அல்லவா? இல்லை. இயேசு இந்த வார்த்தையை சொல்லுமுன் பிதாவுடன் உறவாடியிருந்த இயேசு தாவீதின் சங்கீத வார்த்தையை நினைவுகூர்ந்தார் என்றே சொல்லலாம். அதுவே பொருத்தமாக இருக்கும்.

5. தாகமாயிருக்கிறேன்

'**தாகமாயிருக்கிறேன்**' (யோவான் 19;28) என இயேசு கிறிஸ்து மூன்றாம் மணி நேரம் நெருங்குகின்ற நேரத்தில் இன்னும் சில நிமிடங்களில் தன் ஆவியை ஒப்புக் கொடுக்கும் முன் '**தாகமாயிருக்கிறேன்**' என்றார் என்று காண்கிறோம்.

இதிலும் ஒன்றை முக்கியமாக கருத்தில் கொள்ள வேண்டும். கர்த்தராகிய இயேசு கிறிஸ்து கூறிய வார்த்தை அவருடைய உலக பரியந்தமான தாகமா? அல்லது ஆவிக்குரிய தாகமா? என்பதை நாம் முதலில் உறுதி செய்து கொள்ள வேண்டும். பிற்பகல் பொழுதுக்கும் மாலை 3 மணிக்குமிடையே சிறிது அமைதியாக எதுவும் சொல்லவில்லை. அந்த நேரத்திலும் அவர் பிதாவோடு உறவாடிக் கொண்டிருக்க வேண்டும். அதற்குப் பின் தேவனே, தேவனே ஏன் என்னைக் கைவிட்டீர் என்ற தாவீதின் சங்கீதத்தில் உள்ள முதலாம் வார்த்தையை சொல்கிறார். அதன் பின் 5ஆம் வார்த்தையாகச் சொல்லும்போது 'தாகமாயிருக்கிறேன்' என்று சொல்லும் வார்த்தையும் தாவீதின் சங்கீதத்திலிருந்த வார்த்தையே என்பதை மனதில் கொண்டு இதற்கு பொருள் காண வேண்டும்.

'**தன்னை ஜீவத் தண்ணீர்**' என்ற இயேசு '**என்னிடம் வருகிறவன் தாகமடைய மாட்டான்**' என்று சொல்லிய இயேசு தானே தாகமாயிருக்கிறேன் என்று சொல்லியிருப்பாரா? ஆனால் அவ்விதம் அவர் சொன்னார் என்பது வரலாற்று உண்மை. அப்படியானால் அதன் பொருள் என்ன? இதற்கு விடை காண தாவீதின் வார்த்தைகளைப் பார்ப்போம். தாவீது எந்த நேரத்தில் எதைக் குறித்து சொன்னார் என்றும் பார்ப்போம்.

சாத்தானை விரட்டும்போது இயேசு கிறிஸ்து தானாக எதுவும் சொல்லவில்லை. சத்திய வேத வசனத்தையே சொன்னார். இதுபோன்ற சோதனைக் காலத்தில் இயேசு கிறிஸ்து சத்திய

வசனத்தையே மேற்கோள்காட்டி பேசி இருக்கிறார் என்பதை நாம் நன்கு அறிவோம். அதுபோன்று இந்த சூழ்நிலையிலும் இயேசு கிறிஸ்து வேத வசனமாக தேவன் பரிசுத்த ஆவியால் தாவீதுக்கு வெளிப்படுத்திய வசனத்தையே இப்பொழுதும் பயன்படுத்தினார் என்பதே சரியான கருத்தாக இருக்க முடியும். இதற்கு விடை காண முற்பட்டால் நாம் காணும் விடை இயேசு கிறிஸ்து சொன்னது ஆத்தும தாகமே என்பதை புரிந்து கொள்ள முடியும்.

தாகம் பற்றி எழுதிய ஒரு தேவ ஊழியர் தாகத்தை நான்கு விதமாகக் காண்கிறார்.

1. சரீர தாகம், 2. வேத வாக்கியர்கள் மேல் தாகம், 3. ஆத்தும தாகம், 4. தெய்வீகத் தாகம் என்கிறார். ஆனால் கிறிஸ்து சொன்னது சரீர தாகத்தையே குறிக்கிறது என்று பொருள் காண்கிறார். அதற்கு அவர் காட்டும் உதாரணம் ‘தேவன் மாம்சத்திலே வெளிப்பட்டார் (1 தீமோத்தேயு 3:16), அந்த வார்த்தை மாம்சமானது (யோவான் 1:14). அவர் மாமிசத்திலிருந்தபடியால் சரீர தாகம் அவரை வருத்தியது. தாகத்திற்கு அவர் அப்பாற்பட்டவர் அல்ல. நம்மைப் போலவே வாழ்க்கை முறை அவருக்கும் இருந்தது என்கிறார்.

ஆம், அவர் பசியாயிருந்தார் – (மத் 4:2), களைப்படைந்தார் – (யோவான் 4:6), கோபமுள்ளவரானார் – (மாற்கு 3:5), மனதுருக்க முள்ளவரானார் – (மத் 9:36), துயரமுள்ளவரானார் – (மத்தேயு 26:37) இப்படி மனிதனுக்குரிய எல்லா குணாதிசயமுள்ளவருக்கு சரீர தாகம் ஏற்பட்டதில் வியப்பொன்றுமில்லையே!’’ என்கிறார்.

நல்லவேளை மனிதனுக்குரிய எல்லா குணாதிசயமுள்ளவருக்கு பாவமும் இருந்தது என்ற முடிவிற்கு வரவில்லை. அல்லேலுயா! மனிதனுக்குரியவைகளை மனிதனுக்குரியதாகவும், தேவனுக் குரியதை தேவனுக்குள்ளதாகவும் சிந்திக்க வேண்டும் என்ற வார்த்தையின்படி சிந்திப்போம். அவர் மனிதனாக அவதரித்தால் மனித குணமுள்ள அவரிடம் சரீர தாகம் இருந்தது என்பதை நாம் மறுக்க முடியாது. அவர் மனிதனாக வாழ்ந்த காலத்தில் ஏற்பட்ட தாகம் சரீர தாகமாக இருக்கலாம். ஆனால் பரலோகம் செல்லும் நேரத்தில் தேவனுடைய சித்தத்தை வெளிப்படுத்தும் இந்த நேரத்தில் இயேசு இப்படி கூறியிருப்பது சரீர தாகம் என்று சொல்லக் கூடுமானால் இயேசு கிறிஸ்து ஏன் கடைசி நான்கு வார்த்தைகளையும் வேதத்திலிருந்து, தாவீதின் சங்கீதத்திலிருந்து

சொல்லியிருக்க வேண்டும்? ஒரு சாதாரண மனிதனாக, தண்ணீர், தண்ணீர் என்றோ, தண்ணீர் தா என்று வேறு வார்த்தைகளையோ பயன்படுத்தி இருக்கலாமே.

இப்பொழுது சங்கீதத்தில் தாவீது கூறும் இந்த வார்த்தைகளைச் சற்று காண்போம். அதன் பின் எல்லாம் முடிந்தது என்று இயேசு அறிந்து, வேத வாக்கியம் நிறைவேறத்தக்கதாக, தாகமாயிருக்கிறேன் என்றார் – யோவான் 19:28. வேத வாக்கியம் நிறைவேறத்தக்கதாக தாகமாயிருக்கிறேன் என்று அவர் சொன்னதால்.. அவர் சொன்ன தாகம் பற்றி வேத வசனம் என்ன சொல்கிறது என்று பார்ப்பது நமது கடமையாகும். ''**என் ஆத்துமா உம் மேல் தாகமாக இருக்கிறது**'' – சங்கீதம் 143:6.

''**பூர்வ நாட்களை நினைக்கிறேன், உமது செய்கைகளை யெல்லாம் தியானிக்கிறேன். உமது கரத்தின் கிரியைகளை யோசிக்கிறேன். என் கைகளை உமக்கு நேராக விரிக்கிறேன். வறண்ட நிலத்தைப் போல என் ஆத்துமா உம் மேல் தாகமாயிருக்கிறது**'' என்று சங்கீதத்தில் தாவீது கூறுகிறார். மதியம் முதல் எண்ணி, எண்ணி தேவனோடு உறவாடி எதுவும் பேசாமல் இருக்கிறார். அதன்பின் என் ஆத்துமா உம் மேல் தாகமாயிருக்கிறது என்கிறார்.

சங்கீதம் 63:1இல் ''**என் ஆத்துமா உம் மேல் தாகமாயிருக்கிறது, என் மாம்சமானது உம்மை வாஞ்சிக்கிறது**'' என்கிறார் சங்கீதம் 63:2இல். ''இப்படியே பரிசுத்த ஸ்தலத்தில் உம்மைப் பார்க்க ஆசையாயிருந்து, உமது மகிமையையும் உமது வல்லமையையும் கண்டேன். இன்னும் சில நிமிடங்கள் கிறிஸ்து பரிசுத்த ஸ்தலத்திற்கு போகப் போகிறார். ஆவியின் தேவ மகிமையையும் வல்லமையையும் காண்கிறார். விரைவில் அங்குச் செல்ல அவருடைய ஆத்துமா தாகமாக இருந்தது என்று சொல்லியிருக்கலாம் அல்லவா?

இயேசு கிறிஸ்து இந்த பூமியில் மனிதனாக அவதரித்து தேவனால் தமக்கு கொடுக்கப்பட்டு காரியம் முடிவுபெறும் கடைசி நேரம்... அவர் மகிமை உயிரோடு எழுந்து சாத்தானை வெற்றி காணப் போகும் கடைசி நேரத்தில் அவர் இருக்கிறார். அந்த நேரத்தில் அவர் நினைவுகூறும் வேத வசனம் 'தாகமாயிருக்கிறேன்..' அவர் நினைவு கூர்ந்த வேத வசனம் எதுவாக இருக்கும்?

சங்கீதம் 42:1,2. ''**மானானது நீரோடைகளை வாஞ்சித்துக் கதறுவது போல, தேவனே என் ஆத்துமா உம்மை வாஞ்சித்துக் கதறுகிறது.**''

என் ஆத்துமா தேவன் மேல், ஜீவனுள்ள தேவன் மேலேயே தாகமாயிருக்கிறது. நான் எப்பொழுது தேவனுடைய சந்நிதியில் வந்து நிற்பேன்? என்ற தாவீதின் வார்த்தை போல, தேவனுடைய சந்நிதிக்குச் செல்லும் நேரம் நெருங்கி விட்டது. அங்கு தேவனோடு இருக்க, ஜீவனுள்ள தேவன் மேலேயே தாகமாயிருக்கிறது என்று இயேசு கிறிஸ்து தாவீதின் வார்த்தையை நினைவுகூறுகிறார்.

அவர் இந்த உலகத்தில் வாழ்ந்த காலங்களில் அவருக்கு ஏற்பட்ட தாகத்தையும், உலக வாழ்க்கையை, மனித சரீரத்தை விட்டு தேவனோடு சேர இருக்க வேண்டிய இந்த நேரத்தில் கிறிஸ்து ஆவியால் நிறைந்தவராய், தேவனால் தாவீதுக்கு ஆவியில் தெரிவித்த வசனங்களையே கூறினார் என்று சொல்லலாம். கன்மலையிலிருந்து தண்ணீர் தந்த தேவனிடம் தன் ஆத்தும தாகத்தை போக்க, பரிசுத்த ஸ்தலத்தை தேடுவது அவருடைய ஆத்தும தாகமாகவேயிருந்தது. அல்லேலுயா!

6. முடிந்தது

சிலுவை வார்த்தைகளில் 6வது வார்த்தையான '**முடிந்தது**' என்ற வார்த்தை யோவான் 19:30இல் மட்டுமே காண முடிகிறது. மற்ற மூன்று சுவிசேஷங்களிலும் மத்தேயு, மாற்கு, லூக்கா ஆகிய மூவரும் இதைக் குறிப்பிடவில்லை என்பதை காண்கிறோம்.

''**இயேசு காடியை வாங்கிய பின்பு முடிந்தது என்று சொல்லி, தலையைச் சாய்த்து ஆவியை ஒப்புக் கொடுத்தார்**'' – யோவான் 19:30. மத்தேயு இதைக் குறிப்பிடும்போது, ''**இயேசு மறுபடியும் மகா சத்தமாய்க் கூப்பிட்டு ஆவியை விட்டார்**'' – மத் 27:50 என்றும், மாற்கு இதை எழுதும்போது, ''**இயேசு மகா சத்தமாய்க் கூப்பிட்டு ஜீவனை விட்டார்**'' – மாற்கு 15:37 என்றும், லூக்கா சுவிசேஷத்தில் இதைப்பற்றி எழுதும் லூக்கா ''**இயேசு, பிதாவே உம்முடைய கைகளில் என் ஆவியை ஒப்புவிக்கிறேன் என்று மகா சத்தமாகக் கூப்பிட்டுச் சொன்னார். இப்படிச் சொல்லி ஜீவனை விட்டார்**'' – லூக்கா 23:46 என்றும் எழுதுகிறார்.

ஆனால் யோவான் மட்டுமே 'முடிந்தது' என்று சொல்லி தன் ஜீவனை விட்டார் என்கிறதைப் பார்க்கிறோம். இவர்கள் மூவரும் இயேசு மகா சத்தமாய்க் கூப்பிட்டார் என்று சொல்வதைப் பார்க்கும்போது இதற்கு முன் சொல்லப்பட்டபடி இயேசு தன்

துன்பத்தால் சோர்ந்து போகவில்லை என்பதையும், நான் எதற்காக வந்தேனோ அந்தக் காரியத்தைச் செய்து முடித்து விட்டேன் என்று வெற்றியை முழக்கமிட்டார் என்றே கருத முடிகிறது. இந்த நிலையில் இதற்கு முன் சொன்ன நான் தாகமாயிருக்கிறேன் என்பது ஆத்துமதாகமே, சரீரதாகமல்ல என்றும் எண்ணத் தோன்றுகிறது.

'**கர்த்தர் எனக்காக யாவற்றையும் செய்து முடித்தார்**' என்று தாவீது கூறிய வெற்றியின் குரல் போன்று ஒரு வெற்றி முழக்கமே என்று கருதலாம்.

ஏதேன் தோட்டத்தின் நடுவில் இருந்த மரத்தின் கனியை ஆதாம் மூலம் உண்ட மனித இனம் பாவத்திற்குள்ளானது. கபாலஸ்தலம் நடுவில் இருந்த கல்வாரி மரத்தில் தேவ ஆட்டுக்குட்டியான இயேசு கிறிஸ்துவின் தியாகக் கனியில் மனித பாவம் நீங்கிப் போனது.

யோவான் 19:28இல் ''**அதன்பின்பு, எல்லாம் முடிந்தது என்று இயேசு அறிந்து, வேத வாக்கியம் நிறைவேறத்தக்கதாக தாகமாயிருக்கிறேன் என்றார்**'' என்று காண்கிறோம்.

இதில் யோவான் குறிப்பிடும் வேதவாக்கியம் எது என்று பார்ப்போம். ''**என் ஆகாரத்தில் கசப்பு கலந்து கொடுத்தார்கள். என் தாகத்திற்கு காடியைக் குடிக்க கொடுத்தார்கள்**'' – சங்கீதம் 69:21.

இதில் குறிப்பிடப்பட்ட வேதத்தின் தீர்க்கதரிசன வசனத்தை யோவான் குறிப்பிடுகிறதைக் கண்டு நாம் ஒரு முடிவுக்கு வரக் கூடும். இயேசு கிறிஸ்து சிலுவையில் சொல்லிய வார்த்தைகள் எல்லாம் தாவீதின் தீர்க்கதரிசன வசனமே என்று சொல்லலாம். ஆகையால் கடைசியாக சொல்லப்பட்ட வசனங்கள், இயேசு சரீர துன்பத்தால் சொல்லப்பட்டவைகள் அல்ல. தீர்க்க தரிசன வசனங்கள். இயேசுவின் மூலம், அவர் மரணத்தின் மூலம் எப்படி நிறைவேறியது என்பதை தேவன் வெளிப்படுத்த இயேசு அதைச் சொன்னார் என்று அறிகிறோம். கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவைப் பற்றி தீர்க்கதரிசனமாக சொல்லப்பட்ட பிறப்பு, வளர்ப்பு இவைகள் எல்லாம் முன்னமே நிறைவேறப்பட்டது. இப்பொழுது அவர் மரணம் பற்றிய தீர்க்கதரிசனமும் நிறைவேறிற்று என்றும், தான் வந்த நோக்கம், தெய்வ சித்தம் மனுக்குல மீட்பு, இரட்சிப்பு இவைகள் எல்லாம் நிறைவேறிற்று என்பதை, தான் பெற்ற வெற்றியை

முடிந்தது என்று குறிப்பிட்டு, இனி மனுஷ குமாரனாக உலகில் தனக்கு வேலை இல்லை என்பதைக் காட்டினார்.

7. உம்முடைய கைகளில் என் ஆவியை ஒப்புவிக்கிறேன்

கடைசியாக 7வது வார்த்தையாக இயேசு கிறிஸ்து ''**பிதாவே, உம்முடைய கைகளில் என் ஆவியை ஒப்புவிக்கிறேன் என்று மகா சத்தமாகக் கூப்பிட்டுச் சொல்லி ஜீவனை விட்டார்**'' – லூக்கா 23:46.

சிலுவையில் சொல்லப்பட்ட வார்த்தைகளின் கடைசி வார்த்தை 7வது வார்த்தையாகும். தேவன் ஆறு நாட்கள் உலகைப் படைத்து 7வது நாள் ஓய்வு நாளாக ஏற்படுத்தினார்.

முதல் வார்த்தையிலும் பிதாவை அழைத்து இவர்களை மன்னியும் என்ற இயேசு, கடைசி வார்த்தையிலும் பிதாவை அழைத்து தன் ஜீவனை ஒப்புக் கொடுக்கிறார். முடிந்தது என்ற வார்த்தை மற்ற மூன்று சுவிசேஷங்களிலும் இல்லாதிருந்தும், சிலுவை வார்த்தைகளே ஏழு என்று பூரணப்படுத்தும் வகையில் வரிசைப்படுத்தப்பட்டுள்ளதோ என்றும் எண்ணத் தோன்றுகிறது.

கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவை யூதர்கள் சிலுவையில் அறைந்து கொன்றார்கள் என்று யாரும் சொல்ல முடியாது. இந்த உலகத்தையும் உயிரையும் படைத்த தேவனை, தேவகுமாரனை, அவரால் படைக்கப்பட்ட மனிதர் கொல்ல முடியாது. இயேசு, பிதாவிடம் தன் ஜீவனை ஒப்புக் கொடுத்தார். தன்னை அனுப்பிய பிதாவிடம் தன்னை என் பணி முடிந்தது என்று திரும்ப ஒப்புக் கொடுத்தார். இந்த வார்த்தையிலும் இயேசு தாவீதின் தீர்க்கதரிசன வார்த்தையையே கூறி தன் ஜீவனை ஒப்புவித்தார் என்பதைக் காண்கிறோம்.

''**உமது கையில் என் ஆவியை ஒப்புவிக்கிறேன்.**'' ''**சத்திய பரனாகிய கர்த்தாவே நீர் என்னை மீட்டுக் கொண்டீர்**'' – சங்கீதம் 31:5 என்ற வார்த்தையின்படி இயேசு ஆவியை ஒப்புக் கொடுத்தார். இந்த கடைசி வார்த்தையும் தாவீதின் தீர்க்கதரிசன வார்த்தையே என்பதைக் காண வேண்டும்.

தாவீது சங்கீதம் 31:5இல் கூறியபடி பிதாவாகிய தேவன் தன் குமரனாகிய இயேசு கிறிஸ்துவை இந்த உலகத்திற்கு அனுப்பி

மனித இனத்தின் பாவங்களை மன்னிக்க ஜீவ பலியாய் அவரை ஒப்புக் கொடுத்து, மீண்டும் அவர் தம் ஆவியை பிதாவிடம் ஒப்புவிக்க தாவீது கூறியது போல சத்திய பரனாகிய கர்த்தாவே தேவரீர் என்னை மீட்டுக் கொண்டீர் என்கிறார். இயேசு கிறிஸ்து கூறிய கடைசி வார்த்தையும் தாவீதின் வார்த்தையே.

கர்த்தராகிய இயேசு கிறிஸ்து மரித்தார். தன் ஆவியை ஒப்புக் கொடுத்தார் என்பது உண்மையே. ஆனாலும் அவருடைய ஜீவனை எடுக்க மனிதனால் முடியாது. யோவான் 10ஆம் அதிகாரத்தில் இயேசு தன் உயிர்த்தெழுதல் பற்றி மறைமுகமாகச் சொல்லுகிறார்.

''**நான் ஜீவனை மறுபடியும் அடைந்து கொள்ளும்படிக்கு அதைக் கொடுக்கிறபடியினால் பிதா என்னில் அன்பாயிருக்கிறார். ஒருவனும் அதை என்னிடத்திலிருந்து எடுத்துக் கொள்ள மாட்டான். நானே அதை கொடுக்கிறேன்; அதை கொடுக்கவும் எனக்கு அதிகாரம் உண்டு. அதை மறுபடியும் எடுத்துக் கொள்ளவும் எனக்கு அதிகாரம் உண்டு. இந்தக் கட்டளையை என் பிதாவிடத்தில் பெற்றுக் கொண்டேன் என்றார்**'' – யோவான் 10:17,18.

மேலை நாட்டிற்கு ஒரு நாட்டின் பிரதிநிதியாக அனுப்பப்பட்டவர் தன் வேலையும் காலமும் முடிந்த பின் தன் பொறுப்பை ஒப்புவிப்பது போல், இந்த உலகத்திற்கு இயேசு எதற்காக அனுப்பப்பட்டாரோ அந்தப் பணியை செம்மையாய் செய்து முடித்தபின் முடிந்தது என்று வெற்றி முழக்கமிட்டு, சத்தத்தோடு தன் ஜீவனை ஒப்புக் கொடுத்தார்.

''**என் சித்தத்தின்படியல்ல, என்னை அனுப்பியவருடைய சித்தத்தின்படி செய்யவே நான் வானத்திலிருந்து இறங்கி வந்தேன்**'' – யோவான் 6:38 என்ற இயேசு அதை நிறைவேற்றி தன் ஜீவனை மீண்டும் அவரிடம் ஒப்புக் கொடுத்தார். பரிசுத்த ஆவியினால் உயிர் பெற்ற இயேசு அதை அனுப்பினவரிடமே ஒப்புக் கொடுத்தார்.

''**சுயமாகப் பேசுகிறவன் தன் சுய மகிமையைத் தேடுகிறான். தன்னை அனுப்பினவரின் மகிமையைத் தேடுகிறவனோ உண்மையுள்ளவனாயிருக்கிறான், அவனிடத்தில் அநீதியில்லை**'' – (யோவான் 7:18) என்று கர்த்தராகிய இயேசு கிறிஸ்து சிலுவையின் பாடுகள் மத்தியிலும் தன் மகிமைக்காக பேசாமல் தேவன் பரிசுத்த

ஆவியின்மூலம் தீர்க்க தரிசனமாகத் தெரிவித்ததையே பேசினார் என்பதை உறுதியாகச் சொல்லக் கூடும்.

இதைப் படிக்கும் உங்களுக்கு இதில் மாறுபட்ட கருத்து இருக்கக் கூடும். நான் 40 முறைக்கும் மேலாக வேதத்தைப் படித்திருந்தும் ஒவ்வொரு முறையும் வேறு வேறு கருத்துகளையே காண்கிறேன். உங்கள் கருத்துகளை நீங்கள் என்னிடம் கடிதம் மூலமாக அல்லது கைபேசி மூலமாகத் தெரிவிக்கலாம். இந்த சிறிய புத்தகத்தை நான் எழுத எடுத்துக் கொண்ட நாட்கள் மூன்றே. சில கருத்துகள் விட்டுப் போயிருக்கக் கூடும். நீங்கள் உங்கள் கருத்துக்களை தெரிவியுங்கள். எனக்காக ஜெபியுங்கள். கிறிஸ்துவின் பணி தொடரட்டும்.

என் புத்தகங்கள் மீண்டும் உங்கள் கைகளில் தவழ காரணமாக இருந்த என் நட்புக்கும், அன்பிற்கும், மரியாதைக்கும் உரிய சகோதரர் டாக்டர் தாயப்பன் அவர்களுக்காக, அவர் குடும்பத்திற்காக, அவருடைய ஊழியத்திற்காகவும் தயவு செய்து ஜெபியுங்கள். தேவனுடைய நாமம் மகிமைப்படட்டும். நீங்களும் உங்கள் குடும்பமும் ஆசீர்வதிக்கப்படும். உங்கள் ஜெப தேவைகளுக்கு தொடர்பு கொள்ளவும்.

என் எழுத்தை, என்னை பல வகையிலும் ஊக்குவித்த டாக்டர் கிளிப்போர்டு குமார் – மகிழ்ச்சி காலங்கள் ஊழியம், சென்னை அவர்களுக்கும், என்றும் நானும் என் குடும்பமும் கடமைப்பட்டிருக்கிறது என்றால் மிகையல்ல.